Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 26 | புதன்கிழமை 22 டிசெம்பர் 2021 | மார்கழி 7 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 518
மொத்தம் 580,727

**உயிரிழப்பு**
நேற்று 24
மொத்தம் 14, 795

### ஒன்றுபட்ட நிலைப்பாட்டை பிரதிபலிக்கும்-

# புதிய ஆவணத்தைத் தயாரிக்க தமிழ் பேசும் கட்சிகள் தீர்மானம்!

## கொழும்பில் நடந்த நேற்றைய கூட்டத்தில் முடிவு

கொழும்பு, டிசெம்பர். 22

தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றுபட்ட நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில், புதிய ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது என்று தமிழ் பேசும் கட்சிகள் நேற்றுத் தீர்மானம் எடுத்துள்ளன. அதனை இந்திய பிரதமருக்கு அனுப்புவது தொடர்பான முன்முயற்சியில் தமிழ் பேசும் தரப்புக்களின் தலைவர்களிடையே ஓர் இணக்க நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. 15

### உதயன் பிரதம ஆசிரியர் - கானமயில்நாதனின் 31ஆம் நாள் நினைவுநிகழ்வு நல்லூரில் இன்று



யாழ்ப்பாணம், டிசெ. 22
உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்த 15

## எஸ்.ரி.ஆர். காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ. 22
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னைநாள் பொருளாளரும் கட்சிப் பிர 15

### காரைநகர் பிரதேச சபையின் பாதீடு மீண்டும் தோற்கடிப்பு

பதவியிழந்தார் தவிசாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 22
காரைநகர் பிரதேச சபையின் பாதீடு மேலதிக ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வர 15

## வெளிநாட்டு அழுத்தங்களை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

### தமிழ் பேசும் கட்சிகள் இந்தியாவை நாடுவது குறித்து அரசின் நிலைப்பாடு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 22
"இந்தியா உட்பட வெளிநாடுகளை நாடும் உரிமை இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றது. அதற்கு நாம் தடையேற்படுத்த மாட்டோம். அதேபோல, இலங்கையென்பது இறையாண்மைமிக்க சுதந்திர 15

### முன்னணி உறுப்பினர்கள் இருவர்-

## கட்சியிலிருந்து 'அவுட்!'

யாழ்ப்பாணம், டிசெ. 22
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகி 15



### பாண், பணிஸ்க்கு இனிமேல் விலைக்கட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, டிசெ. 22
பாண் உள்ளிட்ட அனைத்து விதமான பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்குமான கட்டுப்பாட்டு விலை நீக்கப் 15

### 150 பேரை உலகுக்கு வழங்கிய:

## 105 வயது மூதாட்டி நேற்று உயிரிழந்தார்!



சாவகச்சேரி, டிசெ. 22
பிள்ளைகள் தொடக்கம் கொப்பாட்டன்வரை 150 பேரை (நான்கு தலைமுறைகளை) இந்த உலகத்துக்கு வழங்கியிருந்த, தென்மராட்சி பிரதேசத்தில் 15

### புதுக்குடியிருப்பில்

## இரு வீடுகளில் நள்ளிரவுக் கொள்ளை பல இலட்சம் ரூபா நகைகள் திருட்டு

முல்லைத்தீவு, டிசெ. 22
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இரு வேறு இடங்களில் கொள்ளைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
ஆனந்தபுரம் 06 ஆம் வட்டாரப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஓடு பிரித்து வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் மூவர், கத்தியைக்காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச்சென்றனர். இதன்போது, பெறுமதியான மூன்று அலைபேசிகள் நான்கு பவுண் தங்க 15

**முச்சந்தி முரளி**



"இனிமேல் பணக்காரர் மட்டும்தான் பாண் வாங்கிச் சாப்பிடலாம் எண்ட நிலை வரப்போகுது பாருங்கோ..."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## அமரர் மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்

### (பிரதம ஆசிரியர், உதயன் -சஞ்சீவி)

எமது ஞானவிளக்கு **அமரர் திரு. ம.வ.கானமயில்நாதன்** அணைந்த செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டு, நேரில் வந்து தேற்றியவர்களுக்கும், இறுதி மரியாதையிலும் இறுதிச் சடங்கிலும் அஞ்சலி நிகழ்விலும் நேரில் கலந்து கொண்டு ஆற்றுப்படுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும் நினைவுக் குறிப்புகள் எழுதியவர்களுக்கும் மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலமாகவும் முகப்புத்தகம் மற்றும் இதரவழிகளிலும் எம்மை ஆறுதல்படுத்தியவர்களுக்கும் சிறப்புக் கௌரவம் செய்த உதயன் குழுமம் மற்றும் பிரதான மற்றும் முதற்பக்கச் செய்தியாக வெளியிட்ட ஊடகங்கள், ஏனைய ஊடகத்துறை சார் அனைத்து உள்ளங்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும், துணையாக நின்று உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (22.12.2021) புதன்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**குடும்பத்தினர்**

# மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு: நோயாளர்களுக்கு கடும் நெருக்கடி





**யாழ்ப்பாணம், டிசெ. 22**

**மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் நேற்று பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் - என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச மருத்துவ சேவையில் உள்ளோர் இன்று (நேற்று) நாடு பூராகவும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறுகின்றன.

குறிப்பாக வெளிநோயாளர் பிரிவு இயங்கவில்லை. அத்தியாவசியமான மருத்துவ சேவைகள் மாத்திரம் இயங்குகின்றன. அத்தோடு வெளிநோயாளர் பிரிவில் நாய்க்கடிக்கு உள்ளாகியோருக்கு சிகிச்சை நடைபெறுகின்றது.

அதேபோல் கொரோனாத் தடுப்பு மருந்து வழங்கல் மற்றும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. மேலும் அத்தியாவசியமான அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.

**வவுனியா மாவட்டம்**

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் இடமாற்றச் சபையின் அனுமதியின்றி சுகாதார அமைச்சின் தன்னிச்சையான முடிவின் கீழ் மருத்துவப் பணிகளுக்கு புதிதாக மருத்துவர்களை பிழையான விதத்தில் நியமித்தமைக்கு எதிராக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் வவுனியா வாழ் மக்களும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.

எனினும் வவுனியா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கடுமையான சுகவீனத்துக்காக சிகிச்சைக்காக வருகை தந்தவர்களுக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன் ஏனைய நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளாமல் திரும்பிச் சென்றனர்.

**நுவரெலியா மாவட்டம்**

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சிகிச்சை பெறச் சென்ற நோயாளிகள் கடும் சிரமங்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர்.

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பலர் மருத்துவர்களின் வேலை நிறுத்தம்பற்றி அறியாததால் மருத்துவமனைகளுக்கும் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளுக்கும் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ம-9,26,110)



## சேதன உரத்தால் நெற்செய்கை அழிவு

கிளிநொச்சி,டிசெ.22

அரசால் வழங்கப்பட்ட சேதன உரத்தால், இந்தமுறை காலபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளது என்று வட்டக்கச்சி இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் இந்த முறை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யூரியா தடை செய்யப்பட்ட நிலையில், யூரியாவுக்குப் பதிலாக வழங்கப்பட்ட நனோ திரவ உரம் மற்றும் எக்கோ விர்ரா Eco vita என்ற திரவ உரம் வழங்கப்பட்டது. இவற்றால் எந்தவிதப் பயனும் கிடைக்கவில்லை. அத்துடன் வயலுக்குள் கால்கள் வைத்தால் கால்களை அவிகின்றன. பன்றிகள் இந்த உரத்தின் மணத்துக்கு வந்து நெல்லைச் சேதப்படுத்துகின்றன. விளைச்சலும் குறைவடைந்துள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-4,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மசகு எண்ணெயின் விலைகளில் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.22
கொரோனாத் தொற்றில் புதிய அலைகளால் முடக்க நிலைகள் தோன்றக்கூடும் என்ற அச்சத்தால் எரிபொருளுக்கான விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று சர்வதேச சந்தைத் தகவல்கள் தெரிவித்தன. அமெரிக்காவின் டபிள்யூ.ரீ.ஐ. ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் விலை 66.44 டொலராக விற்கப்படுகின்றது. இதன் விலையில் 6.34 வீத விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பெர்ன்ட் ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் விலை 69.69 டொலராகக் காணப்படுகின்றது. இதன் விலையில் 5.21 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (எ-இ)



## ஓட்டோ கட்டணம் எகிறியது!

கொழும்பு, டிசெ. 22
முச்சக்கர வண்டியின் வாடகைக் கட்டணம், முதலாவது கிலோமீற்றருக்கு 50 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் சடுதியாக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அறிக்கையொன்றை வெளியிட்ட முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. (ம)

# மீண்டும் மீண்டும் சீனாவிடம் கையேந்துகின்றது இலங்கை



**கொழும்பு, டிசெ.22**
**இலங்கை எதிர்நோக்கிவரும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் சீன அரசாங்கம் 1.5 பில்லியன் டொலரை வழங்கவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.**

அமைச்சர் விமல் வீரவன்ஸ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:
கடன் செலுத்துகைக்காக சீனா இந்தக் கடனுதவியை வழங்குகின்றது. கடன் கிடைத்தால் தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு கிடைக்கும்.

பிட்ச் ரேடிங் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல் ஓர் எதிர்வு கூறலே. எதிர்வரும் ஆண்டில் இலங்கை கடன் செலுத்துகையில் சிரமங்களை எதிர்நோக்கும் என பிட்ச் ரேடிங் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது.

இதுவரையில் இலங்கை எந்தவொரு வெளிநாட்டுக் கடனையும் செலுத்தாமல் விட்டதில்லை. என்றார். (எ-இ)

## பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கக் கோரிக்கை!

கொழும்பு, டிசெ. 22
எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, பேருந்துக் கட்டணத்தையும் உயர்த்தவேண்டும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, ஆகக்குறைந்த பஸ் கட்டணமாக 25 ரூபாவை நிர்ணயிக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் கெமுணு விஜேரத்ன தெரிவித்துள்ளார். ஆகக்குறைந்தது 20 வீதத்திலாவது, பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அகில இலங்கை தனியார் பேருந்துச் சங்கத்தின் பிரதம செயலாளர் அஞ்ஜன பிரியஞ்ஜித் வலியுறுத்தியுள்ளார். (ம)

## விலையை உயர்த்தியது லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்

கொழும்பு, டிசெ.22
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ள நிலையில் லங்கா இந்தியன் ஓயில் நிறுவனமும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.

92 ஒக்ரோன் பெற்றோல் லீற்றர் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 177 ரூபாவாகவும், 95 ஒக்ரோன் லீற்றர் 23 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 210 ரூபாவாகவும் ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 121 ரூபாவாகவும், சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 159 ரூபாவாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. (எ-இ)

# எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக மூடப்பட்டன பல உணவகங்கள்!

கொழும்பு, டிசெ. 22
நாட்டில் நிலவும் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக பல உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது மொத்த வெதுப்பகங்களில் 50 சதவீதமானவை மூடப்பட்டுள்ளன. சந்தைக்கு எரிவாயுவை வெளியிடுவதை இடைநிறுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை லிட்ரோ நிறுவனத்துக்கு மீண்டும் அறிவித்துள்ளது. எரிவாயு விநியோகம் மீண்டும் சீரடைந்தால் வெதுப்பகங்களை இயக்குவதில் பிரச்சினைகள் இல்லை - என்றார். (ம)




**க**னவுக்கார எம்.பிக்கு சண்டிலிப்பாயில கிடைச்ச இன்னொரு அவமானம் பற்றியும் இண்டைக்குச் சொல்லுறம் எண்டமெல்லோ. விசயம் என்னெண்டால், ஒவ்வொரு பகுதியையும் எப்பிடி முன்னேற்றுறது எண்டு அந்தப் பகுதிச் சனங்களிட்டையே அபிப்பிராயம் கேக்கிறது தான் 'கிராமத்துடன் உரையாடல்' எண்ட பேரில முந்தநாள் சண்டிலிப்பாயில நடந்த கூட்டம். கனவுக்கார எம்.பி. தான் தான் எல்லாம் வெட்டிப் பிடுங்கிறமாதிரி அங்க போயிருக்கிறார்.

கூட்டம் தொடங்கிட்டு. பிரதேச செயலகக்காரர் ஊர்ச்சனம் சார்பில கதைக்கிறதுக்கு சிலரைத் தெரிவு செய்து வைச்சிருந்தவை. அதில ஒரு பெண்மணி, வறுமையில இருந்து பிறகு வல்லாரைச் சத்துமா தயாரிச்சு, விக்கிற சுயதொழில் செய்து இப்ப வாழ்க்கையில முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறா. அவா தன்ர அனுபவத்தை மற்றவைக்குச் சொன்னால், அவையளுக்கும் ஒரு நம்பிக்கை வந்து தாங்களும் சொந்தக்காலில நிக்கிறமாதிரி சுயதொழில் செய்து தங்கட குடும்பத்தையும், ஊரையும் முன்னேற்றுவினமெல்லோ. அந்த நோக்கத்துக்காக அவாவை பேச விட்டிச்சினம். அந்த அம்மாவும், வல்லாரைச் சத்துமா செய்து விக்கத் தொடங்கினதையும், அதுக்கு வலி.தென்மேற்கு சபையின்ர தவிசாளரும், கூட்டமைப்பு உறுப்பினர்களும் நிறைய உதவி செய்ததையும், அவையின்ர உதவியால இண்டைக்கு ஒரு நல்ல நிலைக்கு வந்து , இப்பிடி எல்லாருக்கும் முன்னால முன்னுதாரணமாக நிண்டு பேசுற அளவுக்கு வாழ்க்கையில உயர்ந்ததையும் சொல்லிக் கொண்டே போனா.

அப்பிடி அந்த அம்மா கூட்டமைப்பையும், வலி.தென்மேற்கு சபையையும் புகழ்ந்து கொண்டுபோக, பாழாப் போன கனவுக்காரருக்கு முகமெல்லாம் இருண்டு போச்சு. 'இதென்னடா எனக்கு முன்னால கூட்டமைப்பை புகழவைச்சிட்டாங்கள். என்னைப் புகழுற ஆக்களையெல்லோ செட் பண்ணிக் கூட்டிக் கொண்டு வந்திருக்கவேணும்' எண்ட மாதிரி ஏற்பாடு செய்த அதிகாரிகளை ஒருமாதிரிப் பார்த்தார்.

இதையெல்லாத்தையும் விட அந்த அம்மா கடைசியில சொன்ன விசயம்தான் கனவுக்காரருக்கு சாணியைத் தோய்ச்சு முகத்தில அடிச்சமாதிரி போட்டுது.

நான் இப்பிடி கஷ்டப்பட்ட நிலையில இருக்கிறன் எண்டும் சுயதொழிலுக்கு உதவி செய்யுங்கோ எண்டும் கனபேரிட்ட உதவி கேட்டனான். மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பண்டத்தரிப்புக் கூட்டுறவுச் சங்கம் எல்லாம் தங்களால முடிஞ்ச அளவுக்கு உதவி செய்தவை. அவ்வளவு ஏன் , முன்பள்ளிகள்கூட இதை விக்கிறதுக்கு உதவி செய்தவை. ஆனால் இந்தச் சுயதொழிலுக்கு சின்னதாகவேனும் உதவி செய்யுங்கோ எண்டு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருக்கு ரண்டு தரம் கடிதம் குடுத்துப் பார்த்தன். ஆனால் அவர் உதவியும் செய்யேலை, கடிதத்துக்கு மறுமொழியும் போடேலை எண்டு அந்த அம்மா நெத்தியில அடிச்சமாதிரி அவ்வளவு பேருக்கும் முன்னால சொல்லச் சொல்ல, கனவுக்காரருக்கு சீலை உரிஞ்சமாதிரிப் போட்டுது.

எத்தனையோ பேருக்கு வேலை வாங்கித்தாறன் எண்டு பயோடேட்டாவை வாங்கி, அவையின்ர போனுக்கு கோல் பண்ணி, வேணுமெண்டா அண்ணைக்கு வோட் பண்ணுங்கோ எண்டு வாக்கையும் வாங்கிப்போட்டு ஏமாத்தினவருக்கு, உந்தக் கடிதம் ஒரு பெரிய விசயமில்லைத்தானே...!



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இந்திய மீனவர்கள் எழுவைதீவில் கைது

## மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவு

**யாழ்ப்பாணம், டிசெ. 22**

**யாழ்ப்பாணம் எழுவைதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 13 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த 2 படகுகளும் கைப்பற்றப்பட்டன.**

அவர்கள், யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக நீதமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜஜநிதிபாலன் உத்தரவிட்டார். கைதானவர்களில் ஒருவர் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவன் என்பதால் அவர் எச்சரிக்கப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 6 படகுகளுடன் 43 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-20,26)

## கொள்ளையன் சிக்கினான்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில், வீடொன்றை உடைத்து பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டுக்காரர் வெளியில் சென்றிருந்த நிலையில் இந்தத் திருட்டு இடம்பெற்றது. வீட்டிலிருந்த 43 'இஞ்ச்' தொலைக்காட்சி, சீடி பிளேயர் மற்றும் சமையலுக்கான இலத்திரனியல் உபகரணங்கள் என்பன திருட்டுப் போயிருந்தன.

திருட்டுத் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் விசாரணைகளை அடுத்து குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டில்ருக் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையிலேயே, திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்துகொண்டிருந்த போது மேற்குறித்த சந்தேகநபர் கைதானார்.

அவற்றை விற்பனைசெய்ய உதவிய தரகரும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் கடந்த 10ஆம் திகதி அச்சுவேலியில் ஒருவரைத் தாக்கி மோதிரத்தைக் கொள்ளையிட்ட சம்பவத்தையும் சந்தேக நபர் ஒத்துக்கொண்டார்.

அதனடிப்படையில் அந்த மோதிரத்தை நிதி நிறுவனம் ஒன்றில் அடகுவைக்க உதவிய ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

## மருமகன் தாக்கி தாய்மாமன் சாவு!

மட்டக்களப்பு, டிசெ. 22

மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் நேற்று இடம்பெற்றது. இதே பகுதியைச் சேர்ந்த அலியார் ஹமீட் (வயது -40) என்பவரே கொல்லப்பட்டார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். காணிப் பிரச்சினை காரணமாக மாமனை (தாயின் சகோதரன்) மருமகன் கொலைசெய்துள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளைக்கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

## வீட்டார் விழித்தமையால் தப்பியோடிய கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் வீடு பிரித்து உள்ளிறங்கிய கொள்ளையர்கள், வீட்டார் விழித்துக் கொண்டதும் தப்பி ஓடினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

வீட்டின் யன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்த கொள்ளையர்கள், அந்த அறையிலிருந்து ஏனைய அறைகளுக்குச் செல்வதற்காக மற்றுமோர் யன்னலை வளைக்க முற்பட்டுள்ளனர். அதன்போது ஏற்பட்ட சத்தம் காரணமாக வீட்டார் விழித்து மின் விளக்குகளை ஒளிரவிட்டபோது அவர்கள் ஓடித் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-27)

## கிணற்றுக்குள் குளித்த சிறுவன் சடலமாக மீட்பு!

வவுனியா, டிசெ. 22

வவுனியா கொக்குவெளிப்பகுதியில் குளிக்க வென்று தோட்டக் கிணற்றில் குதித்த சிறுவன், தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் இதே பகுதியைச் சேர்ந்த அகிலேஸ்வரன் தனுசன் (வயது - 16) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சிறுவன் அந்தப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். பின்னர், கிணற்றில் குளிக்கப்போகின்றேன் என்று அருகிலிருந்த இளைஞர்களிடம் தெரிவித்துவிட்டு சென்றுள்ளார்.

இந்தநிலையில், அவர், தனது ஆடைகளை கழற்றி கிணற்றின் அருகில் வைத்துவிட்டு கிணற்றுக்குள் குதித்துள்ளார். இதனை அவதானித்த அவரது நண்பர்கள் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது, அந்த இளைஞரைக் காணவில்லை.

இதனையடுத்து ஊரமக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குவந்த கிராமத்தவர்கள் கிணற்றினுள் இறங்கி நீண்டநேரமாகத் தேடுதல் நடத்தியும் குறித்த சிறுவனை மீட்கமுடியவில்லை.

பின்னர் கிணற்றுத்தண்ணீர் வெளியே இறைக்கப்பட்டு நடத்தப்பட்ட தேடுதலில் நேற்று முன்தினம் இரவு சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாமடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-110)

### தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்

## குண்டு போடும் போட்டியில் யாழ். இளைஞனுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 22



தேசியரீதியில் இடம்பெற்ற குண்டு போடுதல் போட்டியில் யாழ்ப்பாண இளைஞர் ஒருவன் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடந்தோறும் நடத்திவரும் தேசிய விளையாட்டு விழாவின் இந்த ஆண்டுக்கான 33ஆவது விழா, கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி கோலாகலமாக நடைபெற்றுவருகின்றது.

அங்கு 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் குண்டு போடுதல் போட்டியில் 14.61 மீற்றர் தூரம் குண்டுபோட்டு, யாழ். மாவட்டத்தை சேர்ந்த சு.மிதுன்ராஜ் தேசிய ரீதியில் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கிக்கொண்டார். இவருக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. (த-27)



## பெற்றோலிய சேமிப்பு நிறுவன பணிப்பாளர் பதவி விலகினார்

கொழும்பு, டிசெ. 22

பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் நிர்வாகப் பணிப்பாளருமான உவைஸ் மொஹமட் பதவி விலகியுள்ளார்.

இந்தநிலையில், குறித்த பதவிக்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. உவைஸ் மொஹமட் பதவி விலகுகிறார் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் பதவிவிலகியுள்ளார். (த-இ)

## மீனவர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு முள்ளியானில், மீன்பிடிக்கச் சென்றுதிரும்பிய மீனவர் மீது புலனாய்வாளர்கள் கொடூரமாகத் தாக்கியுள்ளனர் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

5 பேர் கொண்ட புலனாய்வுக் கும்பலே தன்னைத் தாக்கியது என்று, பாதிக்கப்பட்ட மீனவரான ராஜ்குமார் (வயது - 34) தெரிவித்தார்.

அந்தக் குழுவினர், தனது கைகளை கட்டிவிட்டு விக்கெட் மற்றும் கொட்டன்களால் மிகக் கொடூரமாக தாக்கினர் என்று அவர் குற்றம்சாட்டினார்.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 6 மாத கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மோட்டார்சைக்கிள் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், மோட்டார் வாகன உருச்செப்பனிடல், மோட்டார் வாகன வர்ணம் பூசுதல், வெல்டிங் தொழில்நுட்பம், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், மின்பாவனை உபகரணங்கள் திருத்துநர், மரவேலைத்தொழில்நுட்பம், தளபாடம், அலுமினியம் பொருத்துநர், கணிய அளவை உதவியாளர், கணினி வன்பொருளுக்கான சான்றிதழ், கணினி வலையமைப்புக்கான சான்றிதழ், கணினி கிராபிக் டிசைனர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
பயில விரும்புவோர், எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். (ஒ-ரி1)

## சாரதி கௌரவிப்பு

வவுனியா,டிசெ.22
தனியார் பேருந்தில் தவறவிடப்பட்ட தாலிக்கொடியை உரியவரிடம் ஒப்படைத்த, சாரதி கௌரவிக்கப்பட்டார்.
தனியார் பேருந்துச் சாரதியின் நேர்மையைப் பாராட்டி, வவுனியா பேருந்து நிலையத்தில் அவர் கௌரவிக்கப்பட்டார்.
தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் சாரதியைக் கௌரவித்தனர். (ஒ-4-இ)



## சேதனப்பசளை உற்பத்திக்கு தனியாரும் முன்வரவேண்டும்

*மேலதிக செயலர் வலியுறுத்து*



முல்லைத்தீவு,டிசெ.22
அரசின் முயற்சி வெற்றியளிப்பதற்கு தனியார் முன்வந்து, சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்ளும்போது, மாவட்டத்துக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பிலான கூட்டம், கேப்பாபிலவில் உள்ள 59 ஆவது படைப்பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;
பசுமை விவசாயத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் விருத்தி செய்யும் நோக்கில் கமநலசேவை நிலையங்கள் மற்றும் விவசாயத் திணைக்களங்கள், மாவட்டச் செயலகம் ஊடாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
படையினர் முகாம்களிலும், கிராமங்களில் விவசாயிகளும் சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். தனிப்பட்டவர்களும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பசளை உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். மாந்தைகிழக்கில் தனியார் ஒருவர் 49 ஏக்கர் காணியை சேதன வளமாக்கிகளை உற்பத்தி செய்வதற்காகக் கோரியுள்ளார் -என்றார். (ஒ-4-19)



## யொஹானிக்குக் காணி; அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 22
சிங்களப் பாடகி யொஹானிக்கு காணி வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.
பத்தரமுல்ல, ரொபர்ட் குணவர்த்தன மாவத்தையில் 9.6 பேர்ச்சஸ் காணி அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ம)

## சுற்றுலா விடுதிகளுக்கு மின்கட்டணச் சலுகை!

கொழும்பு, டிசெ. 22
சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிடங்களுக்கு மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகையை தொடர்ந்தும் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
இந்த அமைச்சரவைப் பத்திரத்தினூடாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 2020ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி முதல் இந்த வருடம் பெப்ரவரி 28ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த மின்சாரக் கட்டணச் சலுகையை இந்த ஆண்டு இறுதி வரை நீடிப்பதற்கும், அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 36 சமதவணைகளில் அனைத்து நிலுவைகளையும் செலுத்துவதற்கும், சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிடங்களின் உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ம)



## மணிக்கூட்டுக் கோபுர கடிகாரங்கள் சீரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22
யாழ். நகர்ப்பகுதியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் நான்கு பக்க கடிகாரங்களும் சீர்செய்யப்படுகின்றன.
யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனின் "தூய அழகிய நகரம்" எனும் திட்டத்தின் ஊடாக, மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், அதற்கான திருத்தப் பணிகளை முன்னெடுத்துள்ளார்.
"மிடுக்கோடு காட்சியளிக்கும் யாழ்ப்பாணத்தின் தனித்துவமான மணிக்கூட்டுக் கோபுரம், நீண்டகாலத்தின் பின்னர் சரிசெய்யப்படுகின்றது.
இந்த மணிக்கூட்டுக்கோபுரத்தில் பாரம்பரியமிக்க யாழ். வாத்தியத்தின் நாத ஒலியாக மணியோசை நகர் எங்கும் ஒலிக்கும்" என்று வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார். (ஒ-4-27)

## ஜனாதிபதியின் அறிக்கையால் பல்கலை மாணவர்கள் கோபம்

*முன்னிலை சோஷலிஸக் கட்சி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.22
கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடமிருந்து பட்டச் சான்றிதழைச் சில மாணவர்கள் ஏற்க மறுத்த நடவடிக்கை சரியானதே என முன்னிலை சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளதாவது;
கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர்கள் நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி விடுத்த அறிக்கையின் காரணமாக மாணவர்கள் கோபமடைந்துள்ளனர்.
துணைவேந்தர் பத[illegible] பொதுவாக அரசியல் [illegible] தேர்தலின்போது தமக்கு ஆதரவாக இருந்த நபர்களை நியமித்தது தவறா என ஜனாதிபதி அறிக்கையொன்றை விடுத்தார். சான்றிதழ்களைப் பெறுவதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.
மாணவர்கள் தன்னெழுச்சியா[illegible] -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் வேண்டாம் உடன் வெளியேறுக

விமல், வாசு, கம்மன்பிலவுக்கு எதிரணி சவால்

கொழும்பு, டிசெ. 22

**அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு முதுகெலும்பிருக்கும் பட்சத்தில், உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்று சவால் விடுத்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.**

இது தொடர்பில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவிக்கையில்,

அரசுக்குள் இருந்துகொண்டு, அரசைப் பாதுகாக்கும் விதத்திலான அரசியலையே இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், தாங்கள் எதிர்ப்பாளர்கள் என்ற விம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கு முற்படுகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க இடமளிக்கமாட்டோம் என்று விமல், வாசு, கம்மன்பில உள்ளிட்டவர்கள் சூளுரைத்தனர். ஆனால் மேற்கு முனையம் வழங்கப்படும் போது மௌனம் காத்தனர்.

ஆரம்பத்தில் 'போர்ட் சிற்றி' சட்ட வரைவுக்கு போர்க்கொடி தூக்கினர். இறுதியில் இரு கைகளையும் உயர்த்தி ஆதரவு நல்கினர். அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்படும்போது, அமெரிக்க பிரஜை நாடாளுமன்றம் வர இடமளியோம் என்று மார்தட்டினர். எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால், பஸில் நாடாளுமன்றம் வந்தார். நிதி அமைச்சர் ஆனார். 20க்கு எதிர்ப்பை வெளியிட்டவர்களே அதனை ஆதரித்தனர்.

யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு. ஆனால், அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு பாதீட்டை ஆதரித்து வாக்களிக்கின்றனர். இவர்கள் அரசியல் நாடகம் செய்வது தெளிவு. எனவே, முதுகெலும்பிருந்தால் அரசிலிருந்து வெளியேறுமாறு சவால் விடுக்கின்றோம்- என்றார். (ம-4.44)

## மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் 'ஏமாற்றுக்காரன்'

சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, டிசெ. 22

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஏமாற்றுக்காரன். அதனால்தான் உலக அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் தரப்படுத்தல் அவருக்குத் தவறாகத் தெரிகின்றது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறியும் 'நகரத்துக்கு நகரம், கிராமத்துக்கு கிராமம் வீட்டுக்கு வீடு' நிகழ்ச்சியின் மற்றுமொரு கட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திஸ்ஸமஹாராம, காசிங்கம பிரதேசத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையின் கடன் மதிப்பீட்டுத் தரத்தை மேலும் குறைத்துள்ளது. இது உலகப் புகழ்பெற்ற மதிப்பீட்டு நிறுவனம். ஆனாலும் இதனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஏற்றுக்கொள்ளாதது நகைப்புக்குரியது. இந்த மதிப்பீடுகள் விஞ்ஞான முறையின் அடிப்படையிலான உண்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை யாரும் பொய் என்று கூறமுடியாது.

மத்திய வங்கியின் ஆளுநரால் மேற்கொள்ளப்படும் 'ஜில்மால்' ஏமாற்று வேலைகளை உலகில் உள்ள புகழ்பெற்ற நிறுவனமொன்று மேற்கொள்ளும் என்று அவர் நினைத்துள்ளதாக இருக்கக் கூடும்.

இவ்வாறான விடயங்களை இந்த அரசால் செய்ய முடிந்தாலும், உலகப் புகழ்பெற்ற தரவுகளின் அடிப்படையில் முடிவுகளைக் காணும் ஒரு விஞ்ஞானரீதியான பகுப்பாய்வு நிறுவனத்தால் அதனைச் செய்யமுடியாது.

தற்போதைய அமெரிக்க டொலர் கையிருப்பு 1.6 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. பணப் புழக்கமாகக் கிடைக்கும் டொலரின் அளவு 1.1 பில்லியன் அமெரிக்க டொலர். டிசெம்பர் மற்றும் ஜனவரி ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் செலுத்த வேண்டியுள்ள தொகை 1.3 பில்லியன் அமெரிக்க டொலர். அடுத்த ஆண்டு மொத்தமாக பார்க்கும்போது 6.7 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது.

6.3 பில்லியன் டொலர் செலுத்த வேண்டியிருக்கும் போது எங்களிடம் 1.1 பில்லியன் டொலர்தான் இருக்கிறது என்றால் அதற்குமேல் என்ன பேச வேண்டியுள்ளது- என்று அவர் மேலும் கேள்வி எழுப்பினார். (ஒ-இ)

## காட்டில் தலைமறைவாகிய குற்றவாளி கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 22

பல கொலைகளைச் செய்தார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்ட நபர் ஒருவர், யால காட்டில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல வருடங்களாக யால காட்டில் தலைமறைவாக இருந்த இவர் கொலைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த ஜூலை மாதம் கதிர்காமம் வீதியில் இந்து மதகுரு ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட கதிர்காமம் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களின் பிரதான சந்தேகநபராக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-4-இ)

## கொரோனா மாத்திரை: இறக்குமதி ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.22

கொரோனாத் தடுப்பு மாத்திரைகளை இறக்குமதி செய்வதை இலங்கை அரசு தாமதப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 433 நோயாளிகளிடம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இந்த மாத்திரையானது மருத்துவமனையில் சேர்க்கப்படுபவர்கள் மற்றும் இறப்புக்களில் 30 சதவீதக் குறைப்பைக் காட்டியது என்று மருந்து தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 775 நோயாளிகளின் தரவுகளின் அடிப்படையில் சுமார் 50 சதவீத செயற்றிறனைக் காட்டியது.


இந்த மருந்தின் செயற்றிறன் இதற்கு முன்னர் 70 சதவீதமாக இருந்தது என்று இராஜாங்க அமைச்சரான சன்ன ஜயசுமன தெரிவித்தார். தொழில்நுட்பக் குழு மற்றும் நிபுணர்களின் நிபுணத்துவ ஆலோசனைகளின் அடிப்படையிலேயே மாத்திரையை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## சபுகஸ்கந்த மீண்டும் பூட்டப்படும் அபாயம்!

கொழும்பு, டிசெ.22

எரிபொருளைக் கொள்வனவுசெய்ய அரசு கடன்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை காரணமாக, எதிர்காலத்தில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும்.

ஒரு வருடத்துக்கு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு ஓமானிடம் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறப்படும் என்று எரிசக்தி அமைச்சர் கூறியிருந்தாலும் அதனை அரசு பெற்றுக் கொள்ளப் போவதில்லை.



எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெறப்படும் என்று அமைச்சர் கூறியிருந்தாலும், நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து எரிபொருளை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். எனவே 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை நாடு பெறாவிட்டால், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை மூடவேண்டி ஏற்படும் என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ம-4-இ)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

## மீனவர்களை விடுவிக்க துரிதமான நடவடிக்கை

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசிடம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 55 மீனவர்களையும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 8 படகுகளையும் விடுவிப்பதற்கு இலங்கை அரசை வலியுறுத்தி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஸ்டாலின் கேட்டுக்கொண்டார் என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாணும் காணியும்...!

**கோ**த்தாபய அரசின் ஆட்சிக்காலத்தில் பொருள்களின் விலையேற்றத்துக்குப் பஞ்சம் இல்லை. தினமும் தூங்கி எழுந்திருக்கும்போது ஏதோவொரு பொருளின் விலை நிச்சயம் அதிகரிக்கப்பட்டிருக்கும். ஏதோவொரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும். ஏதோவொரு பொருள் சந்தையில் இருந்து காணாமல் போயிருக்கும். அப்படி நடக்காவிட்டால், நீங்கள் கனவில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். இந்தத் தொடர் கதையின் நீட்சியாக எரிபொருள்களின் விலை எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மீண்டுமொருமுறை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் விலையில் ஏற்பட்ட எகிறல், அதனுடன் தொடர்புடைய அத்தனை தொழிற்றுறைகளிலும் மிகப்பெரும் மாற்றத்தை சடுதியாக ஏற்படுத்தியுள்ளது. பேருந்துக் கட்டணங்களைக் குறைந்தது 20 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி வாடகைக் கட்டணம் முதலாவது கிலோமீற்றருக்கு 50 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரித்துள்ளது. வெதுப்பகப் பொருள்களின் விலைக்கட்டுப்பாடு என்ற நாணயக்கயிறு நீக்கப்பட்டுள்ளது. அதனால் இனிமேல் பாணின் விலை 100 ரூபாவைத் தாண்டிவிடும். ஒருகாலத்தில் ஏழைகளின் கடவுள் என அழைக்கப்பட்ட 'பாண்', இனிமேல் பணக்காரர்களால் கூட இலகுவில் வாங்கமுடியாத அளவுக்கு விலையுயரக் கூடும். இவையெல்லாம் அன்றாடம் உழைத்துண்ணும் சமூகத்தின் வாழ்வில் பேரிடியாக இறங்கியுள்ளன.

அதேநேரம் இந்த விலையேற்றங்கள் இத்துடன் நின்றுவிடுமா என்று கேட்டால், இல்லை என்றே அறுதியிட முடியும். ஏனெனில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப – தனிமனித பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த – இந்த அரசிடம் திட்டங்கள் இல்லை. பொறிமுறைகள் இல்லை. கடன்களைப்பெறுதல், பொருள்களின் விலைகளை அதிகரித்தல் என்ற இரு தெரிவுகள்தான் கோத்தாபய தரப்பிடம் எஞ்சியுள்ளது. இந்த ஆகப்பெரும் மடமைத்தனத்தின் கேலிக்கூத்துக்களைத்தான் நாம் இன்று பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

கொரோனாவால் நாட்டின் பொருளாதாரம் சிதைந்துள்ளது. அந்நியச் செலாவணி குறைந்துள்ளது என்பதையெல்லாம் மறுப்பதற்கில்லை. ஆனால், இதை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு என்ன செய்திருக்க வேண்டும்? சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணுகின்றதா? டொலரின் இருப்பைத் தக்கவைப்பதற்காக சர்வதேச வர்த்தகத்தைப் பலப்படுத்தியுள்ளதா? உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்க வழிவகை செய்துள்ளதா? இல்லவேயில்லை. எரிபொருளினதும் அதுசார் துறைகளினதும் விலைகள் அதிகரிக்கப்பட்ட அதேநாளில் (நேற்றுமுன்தினம்), 'மெனிகே மஹே கிதே' பாடல்மூலம் உலக அரங்கில் பிரபலமான சிங்களப் பாடகி யொஹானிக்கு காணி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சுற்றுலா விடுதிகள் வழங்க வேண்டிய மின்கட்டண நிலுவையில் சலுகைகளை அறிவித்துள்ளது. ஆக, அரசு எவருடைய நலனுக்காகச் செயற்படுகின்றது? யாருக்காக இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கின்றது? சுற்றுலாப் பயணிகள் மூலம் டொலர் கிடைக்குமென்ற ஒற்றைக் காரணத்துக்காக ஒட்டுமொத்த நாட்டுமக்களையும் அம்போ என அலறவைத்துவிட்டு, உல்லாசப் பயணத்துறைக்கு மட்டும் விழுந்தடித்துக் கொண்டு அரசாங்கம் சேவகம் செய்வது சரியா?

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஒவ்வொரு தனி மனிதனுடைய பொருளாதார நிலையும் இடியப்பச் சிக்கல் போன்று அலங்கோலப்பட்டுள்ளது. கொரோனாவால் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஒ்வ்வொரு வீட்டிலும் ஏற்பட்டுள்ளது. தனது வருமானத்தை உறுதிப்படுத்த –நிலைப்படுத்த – தக்கவைக்க இருக்கக்கூடிய அத்தனை வழிகளையும் ஒவ்வொரு குடும்பத்தவரும் சிந்தித்துக் கொண்டிருக்கையில் வெந்த புண்ணில் வேலாகப் பாய்ந்துள்ளது அரசின் விலையேற்றச் செயற்பாடு.

இந்த முரண் சிந்தனைகளால்தான் இன்று நாட்டுக்கு நாடு யாசகம் கேட்டுக் கையேந்தும் நிலையில் இந்தத் தீவு உள்ளது. ஆகப்பிந்தியதாக நைஜீரியாவிடம்கூட நீண்டகால தவணையின் அடிப்படையில் எரிபொருள் ஒப்பந்தத்தைச் செய்துள்ளது இலங்கை. இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பு ஆபிரிக்க நாடுகளை விட கீழிறங்கியுள்ளது. இப்படியே சென்றால் இந்த நாட்டில் இருப்பதும் ஒன்றுதான், இறப்பதும் ஒன்றுதான் என்ற நிலைக்கு மக்கள் வந்துவிடுவார்கள்.

உரிய பொறிமுறைகளை விரைந்து ஏற்படுத்துங்கள், பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான அத்தனை வழிகளையும் தேர்ந்தெடுங்கள், சர்வதேசத்துடனான உறவைப் பலப்படுத்துங்கள், மக்களின் தலைகளில் சுமைகளை ஏற்றாதீர்கள். இதைத்தான் அரசாங்கத்திடம் மக்கள் எதிர்பார்க்கின்றார்களே தவிர யொஹானிக்குக் காணி வழங்குவதை அல்ல.




# தடுப்பூசி அட்டை கட்டாயமாகிறது!

**கொழும்பு, டிசெ. 22**

**அடுத்தவருட ஆரம்பம் முதல் பொது இடங்களுக்குப் பிரவேசிக்கையில் தடுப்பூசி அட்டையை உடன் வைத்திருப்பதை கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருட ஆரம்பம் முதல் பொது இடங்களுக்கு பிரவேசிக்கையில் தடுப்பூசி அட்டையை உடன் வைத்திருப்பதை கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படும். இரண்டு தடுப்பூசி டோஸ்களையும் பெற்றவர்களுக்குச் சிறப்புச்செயலி மற்றும் கியூ.ஆர். குறியீட்டு எண் வழங்கப்படும்.

தடுப்பூசி அட்டையின்றிப் பொது இடங்களுக்குள் நுழைய மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மீறி அனுமதி வழங்கினால் உரிய இடங்களின் நிர்வாகமே அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். உதாரணமாக தடுப்பூசி அட்டை இன்றி ஒருவர் திரையரங்குக்குள் பிரவேசித்தால் அதற்கு நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும்.

தடுப்பூசி போடாமல் இருப்பதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அது ஏனையவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடாது - என்றார். (ம)

## எரிபொருள் விலை அதிகரிப்பு வெளிக்கள அலுவலர்கள் பாதிப்பு



சாவகச்சேரி, டிசெ.22

எரிபொருள்களின் விலை அடிக்கடி உயர்த்தப்படுவதால், அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள அலுவலர்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

வெளிக்களப் பணிக்கென மாதாந்தம் பயணப்படியாக ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் நிலையில், வெளிக்களப் பணிகளில் ஈடுபடுவோர், இரண்டு மடங்கு தூரத்துக்கு கடமையின் நிமித்தம் தமது சொந்த வாகனங்களைத் தினமும் பயன்படுத்துகின்றனர் .

எனவே கிலோ மீற்றர் தூரத்துக்கு வழங்கப்படும் இரண்டு ரூபாவை, நான்கு ரூபா அல்லது அதற்கு மேல் உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,9)

## சோளம் தட்டுப்பாடு; திரிபோஷா நிறுத்தம்?

திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளம் கிடைக்கப்பெறாமையால், திரிபோஷா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் திரிபோஷா நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தில் திரிபோஷா உற்பத்திக்காக 570 மெற்றிக் தொன் சோளத்தையே வழங்க முடியும் என்று மாவட்டச் செயலர்கள், திரிபோஷ நிறுவனத்துக்கு அறிவித்திருந்தனர். இதனையடுத்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் மக்காச் சோளத்தை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்தது. எனினும் இதுவரை 2500 மெற்றிக் தொன் சோளம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான 720 மெற்றிக் தொன் பால்மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் திரிபோஷா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,இ)

நாளை 23.12.2021 வியாழக்கிழமை மார்கழி 08
சுபநேரம் : மு.ப. 07.55 - மு.ப.09.25
ராகுகாலம்: பி.ப. 01.55 - பி.ப.03.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமிக்கு நீதி கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, டிசெ.22

**உடையார்கட்டுவடக்கு மூங்கிலாறு கிராமத்தில் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதி கோரி, கிராமமக்கள் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



மூங்கிலாறு கிராமத்தின் பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். சிறுமியின் வீட்டுக்கு இராஜாங்க அமைச்சர் சென்றபோது, மக்கள் தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து பொலிஸாரின் பிரசன்னத்துடன் அமைச்சரின் வாகனம் தொடர்ந்து பயணித்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் மற்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் விளக்கம் கொடுத்தனர். தொடர்ந்து மூங்கிலாற்றுச் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி உடையார்கட்டு மகாவித்தியாலயம் வரை இடம்பெற்றது. (ஒ-4-19)

## முல்லைத்தீவில்

# அதிகரிக்கும் வன்முறைகள்

## அதிகாரிகள் நேரில் ஆராய்வு



முல்லைத்தீவு,டிசெ.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் அதிகாரிகள் குழுவினர் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்தனர்.

புதுக்குடியிருப்பு மூங்கிலாறு கிராமத்தில் அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் வீட்டுக்குக் குழுவினர் சென்றிருந்தனர். வன்முறைகளைத் தடுப்பதற்கு மது,போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட பலர் நிரந்தரத் தொழில் இல்லாது, சட்டவிரோத தொழிலில் ஈடுபடுகின்றனர். பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதுடன், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் உதவவேண்டும் என்று மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர், கிராம அலுவலர், வடமாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் பங்கேற்றனர்.

(ஒ-4-19)



# சிறுவர்களுக்கு பாதுகாப்பு: அனைவருக்கும் பொறுப்பு

## இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

முல்லைத்தீவு, டிசெ.22

எதிர்காலத்தின் முத்துக்களாகிய சிறுவர்களைப் பாதுகாப்பது அனைவரதும் அதிமுக்கிய கடமை என்று இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா வலியுறுத்தினார்.

சிறுவர்கள் பெண்கள்,பாதுகாப்புத் தொடர்பான சந்திப்பு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறுவர் துன்புறுத்தல், சிறுவர்களுக்கான பாலியல் தொந்தரவுகள், கருத்தடை செய்தல் என்பன பல வருடங்களுக்குப் பின்பு மோசமான முறையில் அதிகரித்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் அடிமட்டத்திலிருந்து பிரதேச செயலகப் பிரிவுகள், மாவட்டச் செயலகப் பிரிவுகள் ஊடாக கலந்தாலோசித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் வன்கொடுமைகள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டும். எந்தவிதமான பாகுபாடும் இன்றி சட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். பிரதேசங்களுக்கு ஏற்றவாறு தண்டனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வது குறைவாகவுள்ளது. எனவே சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு குழு ஒன்றை உருவாக்கி கண்காணிக்க வேண்டும். சிறுவர்களுக்கான பாதுகாப்பையும் அவர்களுக்கான உரிமையையும் கொடுப்பது அரசின் முக்கிய கடமை.-என்றார்.

(ஒ-4-19)

# 30 அடி உயரத்துக்கு பறந்தார் இளைஞன்

## புலோலியில் பரபரப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

பட்டம்விட்ட இளைஞன் ஒருவர், சுமார் 30 அடி உயரத்துக்கு பட்டத்துடன் தூக்கிச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் நேற்றமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இளைஞர்கள் பலர்கூடி அந்தப் பகுதியில் பெரிய பட்டம் ஒன்றைப் பறக்க விட்டனர். பின்னர் அந்தப் பட்டத்துடன் இன்னொரு பட்டத்தைத் தொடுத்து ஏற்ற முனைந்தனர்.

அதன்போது இரண்டாவது பட்டத்தின் 'முச்சைக்' கயிற்றைப் பிடித்திருந்தவர் பட்டத்துடன் தூக்கிச் செல்லப்பட்டார்.

சுமார் 30அடி உயரம்வரை பறந்த இளைஞனை, கீழிறக்க முடியாமல் இளைஞர்கள் திணறினர்.

சுமார் 2 நிமிடங்களின் பின்னர், 20 அடி வரையில் கீழிறங்கிய பட்டத்தின் கயிற்றைக் கைவிட்ட இளைஞன், கீழே விழுந்தார்.

(ஒ-4-இ)

# மரண அறிவித்தல்



## வைத்திலிங்கம் செல்வரத்தினம்

48/3 பழம் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை சேர்ந்த வைத்திலிங்கம் செல்வரத்தினம் நேற்று முன்தினம் (20.12.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கருணாவதியின் ஆருயிர் கணவரும், பாமினி, செந்தில்குமரன் (துபால் ஊழியர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற துரைசிங்கம், யோகரட்ணம், மனோகரன் (பிரான்ஸ்), செல்வராணி, பழஞ்சோதி (இந்தியா) , செல்வராகினி, சிறிவதனா, கணேஷ் ஆகியோரின் அன்பு சகோதரனும், பாக்கியராஜா, மணிநாதன் (லண்டன்) பவானி (ஜேர்மனி), செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, குயின், ரகுலேஸ்வரன் மற்றும் சாந்தலிங்கம், விஜயராணி, லதா, கலா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், எடிஸ் (லண்டன்), சசிகுமார், சுனேஸ் (பிரான்ஸ்), றொஜ்சி (பிரான்ஸ்), கம்சிகா (லண்டன்), கரீசினி, சுயன் (பிரான்ஸ்), பமிலன், தீபராஜ் (சுவிஸ்), சுபராஜ், தனுசன் (இந்தியா), நிரோஷன், நிலுஜன் (டோகா), நிலுஜா, ஜனுசன், சஜித்தா, தரணிகா, ஜனுஷ், ரிஷாந், ரிஸானா (லண்டன்), தமிழ்வேந்தன், தர்ஷகா, சத்திகா ஆகியோரின் மாமாவும், ஸ்ரீபன், டயாளினி (பிரான்ஸ்), டயானா ஆகியோரின் சிறிய தந்தையும், பானுஜா, பானுஜன், கர்த்தரீனா, Sam, Salu (ஜேர்மனி), நிவேதா, ஜீவிதா, ஆசாவான், (பிரான்ஸ்), ஆகியோரின் பெரியதந்தையும், விபிஸ்கா, விசாஜினி, டசாணியா, பிறின்சி, கெவஸ், ஷிசானி, பிரவீனா, பிமசிகா, சுரணிதா, ஜென்சா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தனகக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 146 6744 (Viber) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.ராஜீவன்,
பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
பிரதேச செயலகம், பருத்தித்துறை

# பந்தயக் குதிரைகளாக பச்சிளம் சிறார்கள்!



## புலமைப்பரிசில் பரீட்சையும் மனித உரிமை மீறலும்

இலங்கையில் கல்வித் திணைக்களத்தால் தரம் 5 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான உதவித்தொகை வழங்கும் நோக்கத்துக்காக அரசால் உருவாக்கப்பட்ட பரீட்சை இன்று அதன் நோக்கத்தை விட்டு விலகிச் செல்வதை அவதானிக்கமுடிகின்றது. 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் வட மாகாணத்தில் 488 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்ற பத்திரிகைச் செய்திகளை சாதாரணமாகக் கடந்து செல்ல முடியாது.

| மாவட்டம் | பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் | பரீட்சைக்கு தோற்றாத மாணவர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 4897 | 157 |
| மன்னார் | 2107 | 146 |
| முல்லைத்தீவு | 2439 | 114 |
| கிளிநொச்சி | 2570 | 39 |
| வவுனியா | 3046 | 32 |
| | | 488 |

இலங்கையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை, அதாவது 6 வயது தொடக்கம் 16 வயது வரை கட்டாயக்கல்வி நடைமுறையில் உள்ளது. தரம் 11 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றாது விடுவதற்கும், தரம்5 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றாது விடுவதற்கும் பெரியளவான வேறுபாடுகள் உள்ளன. தரம்11 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றாமல் விடுவதற்கு குறித்த மாணவன் சார்ந்த அகக் காரணியே அதிக செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கமுடியும். ஆனால் 10 வயதே உடைய தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாமல் விடுவதற்கு புறக் காரணிகளே அதிகம் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. குறித்த புறக் காரணிகளை எமது கல்விச் சமூகத்தில் வேரூன்ற முதல் ஆரம்பத்திலேயே கண்டறிந்து கிள்ளியெறியாதுவிடின், ஆயிரக்கணக்கான மாணவர்கள் வருடாவருடம் பாடசாலை இடைவிலகுவதுடன், பாடசாலை இடைவிலகல் சார்ந்து உருவாகும் பெரிய சமூகப் பிரச்சினைகளைத் தடுக்க முடியாது போகும் அபாயம் உள்ளது.

### வதைகூடங்களாக பாடசாலைகள்

ஆரம்பக் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோருக்கான பலப் பரீட்சை போல உணரப்பட்டது. அதாவது தமது பக்கத்துவீட்டுப் பிள்ளை, உறவினரின் பிள்ளை, அலுவலகத்தில் சக உத்தியோகத்தரின் பிள்ளைகள் என ஏனைய பிள்ளைகளை விட தமது பிள்ளை கூடிய புள்ளி எடுக்க வேண்டும் என்ற போலிக் கௌரவத்துக்காகவும், நகர்ப் புறப் பாடசாலை அனுமதிகளுக்காகவும் பெற்றோர் பிள்ளைகளை உடல் உள ரீதியாக கசக்கிப் பிழிந்தனர். இந்த நிலை இன்று முற்றுமுழுதாக மாறவில்லை எனினும் பெற்றோரின் அழுத்தங்கள் சற்றுக் குறைவடைய, அதை விட இரண்டு மடங்கு அதிக அழுத்தமாக இன்றைய பாடசாலைகள் 100 வீதம் சித்தி என்ற போலிக் கௌரவத்துக்காக தமது பந்தயக் குதிரைகளாக மாணவர்களை பிரயோகிக்கத் தொடங்கி உள்ளதை கடந்த சில வருடங்களாக அவதானிக்க முடிகின்றது.

வலயக்கல்வி அலுவலக பிரிவு ரீதியாக எத்தனை மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்தனர், எத்தனை மாணவர்கள் மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்றனர் என்ற புள்ளிவிவரம் போட்டியாக உருமாறி,' அது கோட்டக்கல்விப்பிரிவு ரீதியான மற்றும் பாடசாலை ரீதியான ஒப்பீடுகளாக சித்தி வீத தராசுகளில் அளக்கப்பட்டு, கல்வித் திணைக்கள கூட்டங்களில் பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர், வகுப்பு ஆசிரியர் என இறங்கு வரிசையில் பிரயோ கிக்கப்படும் தேவையற்ற அழுத்தங்கள் இறுதியில் 10 வயது பச்சிளம் சிறுவர்களை பாடசாலைகளில் உடல் ரீதியான, உள ரீதியான தண்டனைகளுக்கும் நெருக்குதல்களுக்கும் உட்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலைகளில் தரம் 5 மாணவர்கள் வருடாவருடம் மோசமான உடல் ரீதியான தண்டனைகளுக்கு உட்படுவதைத் காணமுடிகின்றது. இதனது தொடர்ச்சியாக பாடசாலைகள் திட்டமிட்டு சில மாணவர்களை பரீட்சைக்குத் தோற்றவிடாது மறைமுகமாக தடுக்கும் அடிப்படை மனித உரிமை மீறலை செய்வதற்கும் வழி சமைத்துள்ளது.

### மெல்லக்கற்கும் மாணவர்கள் திட்டமிட்டுப் புறக்கணிப்பு?

உதாரணமாக 30 மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்து 25 மாணவர்களே பரீட்சை எழுதி, 25 மாணவர்களும் 70 புள்ளிகளுக்குமேல் பெற்றால் குறித்த பாடசாலை 100 வீதம் சித்தி என மார்தட்டிக்கொள்ளும். உண்மையில் பரீட்சைக்கு தோற்றாத 5 மாணவர்களையும் சித்திவீதம் கணிக்கும்போது கருத்தில் எடுக்கும் பொறிமுறை உருவாக்கப்படும் எனின் பாடசாலை நிர்வாகம் அனைத்து மாணவர்களையும் பரீட்சைக்குத் தோற்ற வைப்பதற்கு முயற்சி செய்வார்கள். மாறாக சித்தி வீதம் கணிக்கும் போது பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மட்டுமே கருத்தில் எடுக்கப்படுவதால் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் தொடர்பாக பாடசாலை நிர்வாகம் கருத்தில் எடுப்பதில்லை. மாறாக பாடசாலை அதிபர்களே குறித்த சில மாணவர்களை பரீட்சைக்குத் தோற்றவிடாது செய்வதற்கு பல மறைமுக அழுத்தங்களை பிரயோகிப்பதை அவதானிக்க முடிகின்றது. காரணம் பரீட்சைக்குத் தோற்றவிடாமல் செய்யப்படும் மாணவர்கள் பெரும்பாலும் 70 புள்ளிகளுக்கு குறைவாகவே எடுக்கக்கூடிய மெல்லக்கற்கும் மாணவர்களாகக் காணப்படுவர்.

2020ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் விபரத்தை தகவல் அறியும் சட்டம் ஊடாக பெற்று, எழுமாற்றாக சில மாணவர்களை சந்தித்து ஆராய்ந்தபோது கற்றல் இடர்பாடுடைய மெல்லக்கற்கும் மாணவர்கள் மற்றும் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களே பரீட்சைகளுக்குத் தோற்றாத மாணவர்களாகக் காணப்படுகின்றனர். கற்றல் இடர்பாடுகளை உடைய மெல்லக் கற்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தி பரீட்சை எழுத வைப்பது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் கடமையாகும். ஏனெனில் கற்றல் குறைபாடுகள் தொடர் பயிற்சிகள் மூலமும் நிபுணத்துவ சேவை ஊடாகவும் நிவர்த்திசெய்யப்படக்கூடியது.

இரண்டாவது காரணியாகிய விசேட தேவையுடைய மாணவர்கள் 70 புள்ளிகளைப் பெற்றாலோ அல்லது கல்வித் திணைக்களம் வருடாவருடம் தீர்மானிக்கும் மிகக் குறைந்தளவான வெட்டுப்புள்ளியை பெற்றாலோ அவர்களுக்கான கல்வி உதவிப் பணத்தை கல்வி அமைச்சு வழங்கி வருகின்றது. குறித்த விசேட ஏற்பாடுகள் இருப்பது துறைசார்ந்த பலருக்கே தெரியாது என்பதே கசப்பான உண்மை. பெற்றோர்கள் மத்தியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென கல்விக் கொடுப்பனவு திட்டம் உள்ளது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தினாலே பரீட்சைக்குத் தோற்றாத எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்கலாம்.

### பரீட்சைக்குத் தோற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்

தற்போது உட்படுத்தல் கல்வி நடைமுறையில் உள்ளதால் சாதாரண பாடசாலைகளில் விசேட தேவை உடைய மாணவர்கள் இருப்பின் அவர்களுக்குப் பரீட்சை எழுதும் உரிமையைப் பெற்றுக்கொடுப்பது அதிபரின் மனிதாபிமானமான கடமை ஆகும். பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்களை அனுப்பும் போது விசேட தேவையுடைய மாணவர்களுக்கென தனியான விண்ணப்பங்களை மருத்துவச் சான்றிதழுடன் அனுப்புவது முக்கியமானது. எனவே பாடசாலைகளில் 100 வீதம் சித்தி என்பதை கணிக்க முதல் குறித்த பாடசாலை மாணவர்கள் 100 வீதம் பரீட்சைக்குத் தோற்றியவர்களா என்பதை வலயக்கல்வி பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துவதன் ஊடாகவும், தோற்றாத மாணவர்கள் தொடர்பாக அதிபரிடம் விளக்கக்கடிதம் கோருவதன் ஊடாகவும் மாணவர்களை பரீட்சைக்குத் தோற்றவிடாது மறைமுகமாகத் தடுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களை நடக்காது பாதுகாக்க முடியும். குறித்த காரணிகளே தரம் 11 (க.பொ.த சாதாரண தரம்) பரீட்சைகளிலும் மாணவர்களை பரீட்சைக்குத் தோற்றவிடாது தடுக்கும் தொடர்கதையாக வருகின்றமை கசப்பான உண்மையாகும். கல்வி உரிமை சிறுவர்களின் அடிப்படை மனித உரிமை என்பதை உணருவது கல்விச் சமூகம் உட்பட எல்லோரினதும் கடமை ஆகும்.

> மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர், வகுப்பு ஆசிரியர் என இறங்கு வரிசையில் பிரயோகிக்கப்படும் தேவையற்ற அழுத்தங்கள் இறுதியில் 10 வயது பச்சிளம் சிறுவர்களை பாடசாலைகளில் உடல் ரீதியான உள ரீதியான தண்டனைகளுக்கும் நெருக்குதல் களுக்கும் உட்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணப்பற்றாக்குறையால் ஏற்பட்ட சிரமம் இன்று நீங்கும். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சக பணியாளர்களிடம் இருந்து வந்த எதிர்ப்புகள் அடங்கும். அலையவேண்டி வரும்.

**இடபம்:** நல்ல நபர் ஒருவர் அறிமுக மாவார். கவலையற்ற நாள். கவலை ஒன்று தீர்ந்து நிம்மதி அளிக்கும். உற்சாகம்கூடும். குடும்ப ஒற்றுமை நிலைக்க முயற்சி வெற்றி பெறும்.

**மிதுனம்:** சோம்பல் வேண்டாம். பணிகளில் கவனமாக இருக்கவும். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடு வீர்கள். நட்பு வட்டம் விரியும். பொறுப் பும் சுறுசுறுப்பும் அதிகரிக்கும்.

**கடகம்:** ஆடை, ஆபரணம் சேரும். செலவு கூடும். கற்பனை பயம் வேண் டாம். கடன் பாக்கி வசூலாகும். மன நிறைவு உண்டு. உற்சாகமான நாள். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக் கும். எதிரி விலகுவார்.

**சிம்மம்:** அடுத்தவர்களின் நல னுக் காகப் பாடுபட்டு பெருமிதம் கொள்வீர் கள். நீங்கள் விரும்பிய வகையில் இடமாற்றம் உண்டாகலாம். சொத்து வாங்கும்போது கவனமாக இருப்பது நல்லது.

**கன்னி:** மாணவர்கள் இன்று அதிகம் உழைத்துப் பலன் பெறுவர். அலைச்சலுக்குப் பிறகு கடினமான விடயம் ஒன்று நிறைவேறும். அரச நன்மையை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சுபநிகழ்வு ஒன்று உண்டு. நீண்ட நாளாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். மனதை அரித்துக் கொண்டிருந்த கவலையில் இருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. முயற்சி காரணமாக முன்னேறுவீர்கள். பிரச்சி னைகள் தீரும். புதிய முயற்சிகளை சிறிது காலத்துக்கு தள்ளி வையுங்கள். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாக இருக்கும்.


**தனுசு:** எதையும் எதிர்ப்பதை விடுத்து அனுசரித்துச் செல்வது நன்மை தரும். மாணவர்கள் சவால்கள், போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மனம் மகிழும். குழந்தைகளால் பெருமை அடை வீர்கள்.

**மகரம்:** உங்களால் மற்றவர்கள் பயன் அடைவர். பேச்சில் கவனம் தேவை. கடந்த சில நாள்களாக இருந்து வந்த மனஅழுத்தம் விலகும். ஆதரவு பெரு கும். வெற்றி வாய்ப்புக் கூடும். பொறுமை தேவை.

**கும்பம்:** பிரச்சினைகள் தீரும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். முயற்சியில் தடை, தாமதங்கள் இருக்கும். நண்பர் களைச் சந்திப்பீர்கள். பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு கண்டு நிம்மதி அடை வீர்கள்.

**மீனம்:** எந்தவொரு விடயத்திலும் பதற்றமின்றி முடிவு எடுப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். திற மைகள் கூடும்.

# இந்தியாவில் ஒமிக்ரோன் 200ஆக உயர்வு



**புதுடில்லி, டிசெ.22**


**இந்தியாவில் இதுவரை ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 ஆக உயர்வடைந்துள்ளது என இந்திய மருத்துவத்துறையினர் தெரிவித்துள்ளனர்.**

தென்னாபிரிக்காவில் முதன்முறையாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் தற்போது இந்தியா உட்பட 90 நாடுகளுக்குப் பரவிவிட்டது.

மகாராஷ்டிரா தலைநகர் டெல்லியில் தான் ஒமிக்ரோன் பாதிப்பு அதிகமாகக் கண்டறியப்பட்டது.

ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது எனவும் மகாராஷ்டிரா, கர்நாடகம், டெல்லியில் 77 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர் எனவும் மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒமிக்ரோன் பாதிப்பு அதிகரித்து வருவதால் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் மத்திய ஆசிய நாடுகளைச்சேர்ந்த வெளியுறவு அமைச் சர்கள் கூட்டாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். மத்திய ஆசிய நாடுகளான கஜ கஸ்தான், கிர்கிஸ் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 5 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். (ச-இ)



# பிலிப்பைன்ஸில் 'ராய் புயல்' உயிரிழப்பு எண்ணிக்கை 375ஆக அதிகரிப்பு

பிலிப்பைன்ஸ் நாட்டைப் புரட்டிப் போட்ட ராய் புயலில் பலியானவர்களின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளது. தென். கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸ் நாட்டில், கடந்த இரண்டு நாள்களாக வீசிய ராய் புயல் காரணமாக அந்த நாட்டின் தென்பகுதிகள் மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளன.

மணிக்கு 160 கிலோ மீற்றர் வரை வீசிய காற்றுக் காரணமாக ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன.

100க்கும் மேற்பட்ட நகரங்கள் இருளில் மூழ்கின. மேலும் நூற்றுக்கணக்கான மின்கம்பங்கள் சாய்ந்தன.

புயல் காரணமாக அங்கு மின் விநியோகம் மூன்றாவது நாளாக தடைபட்டு தகவல் தொடர்பு சேவையும் முற்றிலும் முடங்கிப் போயுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சக்தி வாய்ந்த ராய் புயல் காரணமாக, இதுவரை, 375 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 500 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)

## தெரு நாய்கள் கடித்ததில் பச்சிளம் குழந்தை சாவு!

புதுடில்லி, டிசெ.22

டில்லியில் மூன்று வயதுக் குழந்தையை, தெரு நாய்கள் கடித்துக் குதறியதில் உயிரிழந்துள்ளது.

பூங்கா ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் கூட்டமாக வந்த நாய்கள், குழந்தையைக் கடித்துக் குதறியுள்ளன. நாய்கள் கடித்துக் குதறியதில் படுகாயமடைந்த குழந்தை உடனடியாக மருத்துவமனை சேர்க்கப் பட்டபோது குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தெரிவித்தனர். (ச)



# ஒரேநாளில் ரூ.47 கோடி வசூல் செய்த 'புஷ்பா'

சென்னை, டிசெ.22

அல்லு அர்ஜுன் நடிப்பில் சுகுமார் இயக்கத்தில் வெளியாகியுள்ள 'புஷ்பா' திரைப்படம் ஒரேநாளில் ரூ.47 கோடி ரூபா வசூல் செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படம் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், ஹிந்தி என 5 மொழிகளில் வெளியாகி அனைத்து மாநிலங்களிலும் 'ஹவுஸ்ஃபுல்' காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், 'புஷ்பா' வெளியான முதல் நாளிலேயே உலகம் முழுக்க ரூ.47 கோடி ரூபா வசூல் செய்துள்ளது என படத்தின் இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத் தனது டுவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். (ச-இ)

உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பு:

# தடகள ஆணைய உறுப்பினராக சிந்து

புதுடில்லி , டிசெ.22

உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பின் தடகள ஆணைய உறுப்பினராக பி.வி. சிந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பு 2021 -2025 ஆண்டுக்கான தடகள ஆணைய உறுப்பினர்களை நேற்று அறிவித்துள்ளது. 6 பேர் கொண்ட இந்தக் குழுவில் இந்தியாவின் நட்சத்திர பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி. சிந்து இடம்பெற்றுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி ஜனவரியில்

கொழும்பு.டிசே.22

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று வர்த்தக மற்றும் கைத்தொழில் முற்போக்கு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளரான ஷியாமல் சுமனரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனவரியில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு கொள்கலன் முனையம் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. அதனை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த நல்லாட்சி அரசு எடுத்த தீர்மானத்தை மாற்றிய மைக்க ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

துறைமுக அதிகார சபையுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும், முனையத்தைப் பாதுகாப்பதற்கும் அயராது உழைத்தன. இந்த முனையத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் துறைமுக அதிகார சபைக்கு பெரும் பங்காற்ற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-4-இ)

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 . 06 . 1972 | 14 . 12 . 2021 |



### திருமதி சுபாஜினி சுபாஸ்கரன்

யாழ் சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் Germany Trier இணை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுபாஜினி சுபாஸ்கரன் கடந்த (14.12.2021) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - இராஜேஸ்வரியின் அன்பு மகளும், கந்தையா காலஞ்சென்ற பொன்னுமணியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - மகேஸ்வரியின் அன்புப் பெறாமகளும், சுபாஸ்கரனின் ஆருயிர் மனைவியும் திவ்யன், நிலுக்சிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராமநாதன், சிவாஜினி ஆகியோரின் அன்புச் சகோத ரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (22.12,2021) புதன் கிழமை Germany Trier இல் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 342) (3/6)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திரு. சந்திரசேகரன் யசீகரன்** அவர்களின் அன்புத் தந்தை

### கந்தையா சந்திரசேகரன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## விண்ணக வாழ்வின் 10 ஆம் ஆண்டில் நினைவலைகள்

| வல்வையில் தாய்மடியில் | பேரின்ப வான்வீட்டில் |
|---|---|
| 12 . 07 . 1942 | 22 . 12 . 2011 |



வைத்தியகலாநிதி

### மரிசலீன்பிள்ளை மரியதாசன் (J.P)

**(பேரின்பம் வல்வெட்டித்துறை)**

சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H) - யாழ். மாநகரசபை (2001 - 2011)

அன்பு அப்பா !

எம்மைக் கண்களாய் காத்து
கரங்களில் ஏந்தி கனிவோடு பேசி
அன்பால் அரவணைத்து எமக்காக
உடலை உருக்கி நாம் வாழ வழிசமைத்து
கடமையின் வடிவமாய் வைத்தியராய்
இறைவழி நின்று உன்னதமாய் வாழ்ந்த
உண்மை அன்பின் ஒளியை - எங்கள் அப்பாவை
இன்னும் தேடுகின்றோம் எங்கள் மனதிலே
ஏன் அப்பா எம்மைப் பிரிந்தீர்கள்

"ஆவே மரியா"
72, கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்

(CS 41765) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **பிறேமா**
**ஸ்ரீ ரங்கநாதன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.11.1970 | 01.01.2021 |



"நெருநல் உளனொருவன் இன்றில்லை
என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"

ஆண்டொன்று ஆனதுவோ உங்கள்
- முகம் பார்த்து
ஆண்டாண்டு ஆனாலும் அழியாதே
- எம் தவிப்பு
மீண்டிங்கு வந்து எம் துயரம் ஆற்ற
வேண்டுகிறோம் ஆண்டவனை
- நிதம்.

குடும்பத்தினர்

(cs 327) (2.6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## கலைமாணிப்பட்டப்படிப்பு (வெளிவாரி)

**முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை,**
**இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2015**

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை எதிர்வரும் 22.12.2021 ஆம் திகதியிலிருந்து 30.12.2021 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி- மாலை 3.45 மணி வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவத்தினை 30.12.2021 இற்கு முன்னராக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக கையளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் மற்றும் பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

பதிவாளர்
21.12.2021

(CR 36775) (3/6)

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 . 10 . 1940 | 21 . 12 . 2021 |



### அமரர் சின்னையா பெருமாள்

இல. 420/57, உழவனூர், தம்பிராசபுரம்

(ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் முன்னாள் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர், கண்டாவளை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம், முன்னாள் தலைவர் புதிய புன்னைநீராவி கிராமசேவகர் பிரிவு முதியோர் சங்கம்)

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், ஊழவனூர் தம்பிராசபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பெருமாள் அவர்கள் நேற்று (21.12.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா வடிவம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாகிய இவர் பெருமாளக்காவின் அன்புக் கணவரும், இந்திரா காந்தி (அதிபர், கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), சித்திரா (ஆசிரியை, கிளி / தம்பிராசா வித்தியாலயம்), சந்திரா (ஆசிரியை, கிளி / பிரமந்தனாறு ம.வி), கணேசமூர்த்தி (பொது சுகாதார பரிசோதகர், அமெரிக்கா), சுந்தரமூர்த்தி (அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மாவட்ட செயலகம், கிளிநொச்சி) காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி, சூரியமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமி (தலைவர், கழனிசனசமூக நிலையம், தருமபுரம்), உருத்திரா விஜேந்திரன் (முகாமையாளர், மழை நீர் சேகரிப்புப் பணியகம் வன்னி மாவட்டம்), சந்திரமோகன் மற்றும் தயாளினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்) பர்மிலா ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், பிரசாந், பிரதீபா, செந்தூரன், காலஞ்சென்ற நிலோசன், ஹேமரஞ்சினி (தாதிய சேவை உத்தியோகத்தர் ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பளை), திவ்யபாரதி (கணினி தொழில்நுட்ப உதவியாளர் Oyslans Software Solution) ஹம்சியா மற்றும் அனோஜன், அட்சயன், பிரணவன் (அமெரிக்கா), மதுரிகா, யதுரிஷா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.12.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அன்னாரின் உழவனூர் இல்லத்தில் நடைபெற்று தருமபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பு சித்திரப் போட்டி

பாடசாலை மாணவர்களிடையே சிறுவர் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு, யாழ். மருத்துவச் சங்கத்தால் சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் வடக்கு மாகணத்திலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் பங்குபெறலாம். இதற்கான பரிசில்கள் வலய மற்றும் மாகாண மட்டத்தில் வழங்கப்படும். பங்குபற்றும் சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். 3 பிரிவுகளில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் பங்குபற்றுவோர் ஆக்கங்களை ஏ-3 ஓவியக் கடதாசியில் வரைந்து அதன் பின்புறத்தில் முழுப்பெயர்,வயது, பாடசாலை, வகுப்பு,முகவரி மற்றும் பெற்றோர் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு artjma2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தலைவர், யாழ்.மருத்துவ சங்கம், யாழ்.போதனா மருத்துவமனை என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்ப வேண்டும். (ஒ-4-இ)

# முருத்தெட்டுவே தேரரின் நூல் கோத்தாபயவிடம்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தரும் நாரஹேன்பிட்டி அபயராமாதிபதியுமா முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் எழுதப்பட்ட 'ஜெனீவா தோல்வியின் எதிரொலி' நூல், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.ஜெனீவா நகரைத் தளமாகக் கொண்டு இலங்கையின் இறையாண்மையில் செல்வாக்கு செலுத்துவதற்கு பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகளை ஆய்வுக்குட்படுத்தியும் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயற்பாட்டில் கிடைத்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும், ஆனந்த தேரரால் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சரான குணபால திஸ்ஸகுட்டியார்ச்சியால் எழுதப்பட்ட "அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள்" நூலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

(எ-இ)

**விற்பனைக்கு**

15′நீளம் 2 1/2′அகலம் 4 தட்டு இரும்பு விறாக்கி .6′ உயரம் 5′அகல சோக்கேசும்

076 0239797

**பணிப்பெண் தேவை**

புத்தளம் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்வதற்கு 40 வயதிற்கும் 60 வயதிற்குமிடைப்பட்ட பணிப்பெண் தேவை. மேலதிக விபரம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

077 975 3083

**நாஹா மருத்துவ நிலையம்**

தீவிரமான கை, கால் விறைப்பு, எரிவு, செயலிழப்பு, மூட்டுவாதம் முழங்கால்வாதம், மாறாத புண்கள், பாரிசவாதம், அஸ்மா, அல்சர் அதிசிறப்பு மருந்தியல்

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

**வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராசாவின் தோட்ட வீதி சந்தியிலுள்ள கடை சகல தளபாடங்களுடன் இயங்கு நிலையில் வாடகைக்கு உண்டு

தொடர்பு

076 7049048 (whats app +4407776655080

# மரண அறிவித்தல்



## நாகேந்திரம் பவளரத்தினம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் பவளரத்தினம் நேற்று (21.12.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரத்தின் அன்பு மனைவியும், தியாகராஜா, காலஞ்சென்ற அருந்தவம் ஆனந்தராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வராஜா, அருந்ததி, சரோஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, அச்சுதன், ராஜேஸ்வரி (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், தவசுதன் - மெலோசா, செந்தில்குமரன் - சந்திரிக்கா, பராபரன் - திவ்யா, வைகுந்தன், மயிலாஜினி - கோடீஸ்வரன் (ஜேர்மனி), லஜித் - நித்தியா, ரகுராம் - நர்மிதா, ரஜீஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், டிலக்ஷன், திவ்யா, டிலக்ஷிகா, தரணிகா, ஆருஜன், அஸ்வின், அனுசன், வஸ்மிகா, அக்ஷனா, ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 12 . 1944



இறப்பு 21 . 12 . 2021

## திரு.வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா

யாழ் வடமராட்சி புலோலி மேற்கு தம்பசிட்டி வாணர்குடியிருப்பை பிறப்பிடமாகவும் புத்தளம், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற தபாற்திணைக்கள புத்தளம்-சிலாபம் பிராந்திய நிர்வாக அதிகாரியுமாகிய திரு.வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா 21-12-2021 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசமணி தம்பதியினரின் மூத்தமகனும், வல்வெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற குழந்தைவேலு செல்லம்மா தம்பதிகளின் மகளாகிய இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (சுங்க அதிகாரி) சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரி, ஸ்ரீநாதன் (இந்திரன் - ஓய்வு பெற்ற ஆசிரியர்) தெய்வசிகாமணி, நந்தனசிகாமணி (சாவித்திரி - ஓய்வு பெற்ற ஆசிரியர்) மதிவதனி (ஜெயந்தி - தபால் அதிபர் பருத்தித்துறை) ஆகியோரின் பாசத்துக்குரிய சகோதரனும் ஆவார். சகோதரர்கள் மணம்புரிந்த வழியில் வேலாயுதம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவநாயகம், காலஞ்சென்ற சபாநாயகம் ஆகியோரினதும் தான் மணம் முடித்த வகையில் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசேந்திரம், பரஞ்சோதி, பசுபதி, இராஜகோபால், கமலாதேவி ஆகியோரினதும் யோகாம்பிகையினதும் அன்பிற்குரிய மைத்துனரும் ஆவார். தனது மகனை சாவகச்சேரியை சேர்ந்த துஷாரிகாவிற்கு மணம்முடித்து கொடுத்த வழியில் சற்குணராஜா, இராஜேஸ்வரி தம்பதியினரதும்; தனது மகளை காரைநகரை சேர்ந்த ரமேஷிற்கு மணம் முடித்து கொடுத்த வழியில் காலஞ்சென்ற குலசிங்கம், தில்லைக்கரசி தம்பதியினரதும் சம்பந்தியுமாவார். மகன் வழி குழந்தைகளான ஆர்கலி, ஆர்விழி ஆகியோரினதும் மகள் வழி குழந்தைகளான அக்ஷரா, தருண் ஆகியோரினதும் பாசம் மிக்க பேரனுமாவார். மேலும் புத்தளம் சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்தினி அம்மன், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் கோவில்களின் தீவிர பக்தரும் ஆவார். இவருடைய திருவுடல் 22-12-2021 (புதன்கிழமை) கொழும்பு பொரளை ஜயரத்தின மலர்சாலையில் காலை 10.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பெற்று, 23-12-2021 (வியாழக்கிழமை) அன்று காலை இறுதி சடங்குகள் நடாத்தப்பெற்று மதியம் 12.30 மணியளவில் பொரளை கனத்தை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம், நன்றி

தகவல் : குடும்பத்தினர்.
தொடர்பு : 0775941826, 0773597068, 0776778864, 0718182336

லலிதா குருமேனியின் ஆண், பெண் பிரச்சனைக்கான தீர்வு



- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா
- காதலன் காதலிக்கிடையில் பிரச்சினையா
- வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவரா நீங்கள்
- வாழ்க்கையில் செல்வம் உங்களை தேடி வர வேண்டுமா
- ஒற்றுமை தேடி ஓடுபவரா நீங்கள் எம்முடன் இணையுங்கள்

நம்பிக்கையுடன் தொடர்புகொண்டால் முப்பொழுதில் பலன்

இரகசியம் பேணப்படும்

இதற்கான தீர்வை நாம் தருகின்றோம்

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும் எம் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் +94767112381

- நேரில் வர முடியாவிட்டால் பதிவு தபால் முலம் செய்து தரப்படும்

Katugastota, Kandy
Lalith Gurumeni 0767112381

# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்தம்பி தியாகராஜா (STR)

அன்னை மடியில் 01.08.1930
இறைவன் மடியில் 21.12.2021



நேற்று (21.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த சின்னத்தம்பி தியாகராஜா (STR) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாஸ்கரன் சிற்பாலயம்,
இல.479, 454 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

சு.பாஸ்கரன் - ஸ்தபதி
பா.கஜேந்திரன் - ஆச்சாரி
பா.பிரணவன்- ஆச்சாரி

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1949



மறைவு 19 . 12 . 2021

## கிருஸ்ணபிள்ளை மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்,
அகில இலங்கை சமாதான நீதவான்)

அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் இல.224, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கிருஸ்ணபிள்ளை மகாலிங்கம் கடந்த 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாராஜினியின் அன்புக் கணவரும், சுரேக்கா (முன்னாள் தேசிய சேமிப்பு வங்கி - உத்தியோகத்தர்), சுலக்சன் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சுலக்சினி (தேசிய சேமிப்பு உத்தியோகத்தர், மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும், இரமணன் (பொருளியலாளர் - அவுஸ்ரேலியா), கார்த்திக் (சட்டக்கல்லூரி) ஆகியோ ரின் அன்பு மாமனாரும், றிதுன், றோகிந், அப்சரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2021) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

224, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (cs.41764) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.
077 248 7989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 குடும்பப் பெண்கள் தீ மூட்டி உயிர்மாய்ப்பு

**கொழும்பு, டிசெ.22**

**கொழும்பு மாநகர சபை எல்லைக்குள், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 20 குடும்பப் பெண்கள் உடலுக்குத் தீ மூட்டி உயிரிழுந்துள்ளனர் -என்று கொழும்பு மாநகர மேலதிக இறப்பு விசாரணை அதிகாரி இரேஷா சமரவீர தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவர்களில் 20 - 30 வயதுக்குட்பட்ட 19 பெண்கள் உள்ளடங்குகின்றனர். உயிரிழந்த 20 பெண்களும் திருமணமானவர்கள். கணவர்களின் கடுமையான துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் தாங்க முடியாத காரணத்தாலேயே உடலுக்குத் தீ மூட்டித் தற்கொலைக்குத் துணிந்துள்ளனர்.

இதற்கு முன்பு தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் இருக்கவில்லை என்றும், 99 சதவீதமான பெண்கள் வாக்குமூலமளித்துள்ளனர். 50 சதவீதமான எரிகாயங்களை உடையவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

தோலுக்கு அடியிலுள்ள எண்ணெய்ப் படலம், தீக்கு நல்ல ஊக்கியாக இருப்பதால், உடல் தீப்பிடிக்கும் போது, தீயை அணைப்பது பொதுவாகக் கடினமாக இருக்கும். அதனால்தான் ஓர் உடல் மரத்தைவிட வேகமாகத் தீயில் எரியும் என்று கூறப்படுகின்றது.

எனவே, ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டுமளவுக்கு அச்சுறுத்துவது அல்லது கொடுமைப்படுத்துவது மனிதப் பண்பு அல்ல. அது பெரும் மனித உரிமை மீறலாகும் -என்றார். (எ-22)



## விழிப்புணர்வுப் போட்டிகள்: வெற்றியாளர்களுக்கு பரிசு

யாழ்ப்பாணம்,டிசெ.22

உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பரிசில்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகமும், கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியா சாலை சுற்றாடல் கழகமும் இணைந்து இந்தப் போட்டிகளை நடத்தின பாடசாலை அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் ஆர். கபிலன்,பாடசாலை நலன் விரும்பி கே.சிவராஜா, சுற்றுச்சூழல் கழகத் தலைவர் லி.கேதீஸ்வரன், கழகச் செயலாளர் ம.சசிகரன் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (ஒ-4)

## சிறைப் பாதுகாப்புக்கு ட்ரோன் தொழில்நுட்பம்

கொழும்பு,டிசெ.22

சிறைச்சாலைகளின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக விசேடப் பயிற்சிகளைப் பெற்ற சிறைச்சாலை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவர் என்று சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## சமையல் எரிவாயு விநியோகம்

கொழும்பு,டிசெ.22

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, சமையல் எரிவாயுவை விநியோகிக்க, எரிவாயு நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு இந்தப்பணிப்புரையை விடுத்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# போதிய அறிவு இன்மையே நெருக்கடிகளுக்குக் காரணம்

### சுசில் பிரேமஜயந்த தெரிவிப்

கொழும்பு, டிசெ.22

விடயங்களை அறிந்த சிலர் மட்டும் அரசை உருவாக்கும் போது சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாண்டிருந்தால், தற்போதைய நிலைமையை அரசு எதிர்கொண்டிருக்காது என்று, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இந்த விடயத்தில் அறிவு இல்லாத நபர்களால் அரசு முன்னெடுக்கப்படுவது புலனாகின்றது. வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களில் ஈடுபடுபவர்கள் டொலரை வைத்திருக்க வேண்டும்.

பால்மா, எரிவாயு, ... ருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நாட்டுக்கு நிதி ஆதாரம் இல்லாதபோதிலும், இந்த நபர்கள் வெளிநாட்டு நாணயங்களைப் பெறுவதற்கான வழிகளைக் கொண்டிருக்கலாம்.

போர் இடம்பெற்ற காலத்தில் ஐந்து வருடங்கள் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த போது, எந்தவித பிரச்சினைகளும் இன்றி எமது கடமைகளை ... என்றார். (...)

## சேவைநலன் பாராட்டு



**வீரகத்திப்பிள்ளை விக்னேஸ்வரன்**
*(அலுவலக உதவியாளர்)*

41 ஆண்டு கால தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை செய்து ஓய்வுபெற்றுள்ள வீரகத்திப்பிள்ளை விக்னேஸ்வரனை பாராட்டி வாழ்த்துகின்றோம். தொடர்ந்தும் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

**வாழ்த்துவோர்:**
ஐக்கிய சங்கம்,
நவில்ட் பாடசாலை.

## நாகபூசணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர் கணக்காளர், வங்கியாளர், அரச உத்தியோகத்தர் ஆசிரியர், தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் பொருத்தம் பார்க்கப்பட்டு உடன் தரப்படும்.

**021 222 9306,**
**077 138 7596,**
**071 999 9306**

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு ,**
**யாழ்ப்பாணம்.**

(CS 41775) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



சிரேஷ்ட சட்டத்தரணி
**கனகரட்ணம் கேசவன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
**ஜி.எஸ். லிங்கநாதன் அன்கோ**
உரிமையாளர்களும், ஊழியர்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு : 07.04.1947
இறப்பு : 19.12.2021

**ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ**
(cs.41763) (2.6)

## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்

இறை நிலை எய்திய எம் அன்புத்தாயாம்



மலர்வு 26 . 08 . 1948
உதிர்வு 15 . 12 . 2019

**குணபாலசிங்கம் அருந்ததி**
(தலைவி நாகவரத நாராயணர் தேவஸ்தானம் - அளவெட்டி)
பூச நாட்சத்திரம் - பஞ்சமி திதி

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்த்தம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாகேஸ்வரம்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
14 . 03 . 2003



இறப்பு
06 . 11 . 2021

மூளாய்பூர்

## அமரர் பிரபாகரன் றஜீவன்

(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவன்)

அண்ணாவுக்கு!

**அன்புத் தம்பி ரங்கடம்பநாதன் விஷ்ணுகாந்தன்** அவர்களின்
ஆத்மார்த்த வேண்டுகோள்

கூடிப்பிறந்தவர் யாருமில்லை என்றிருக்க
ஓடி வந்து என்னோடு கூடி வாழ்ந்த சோதரனே
வாடிப்போய் நின்ற எங்கள் குடும்பத்தவர் வந்து நின்று
கோடி மலர் குவித்து விட்ட சோதரனே றஜீபனே
ஆடிப்போய் நிற்கும் எங்கள் மனங்களை ஆற்றுவதற்கு
தேடி வரும் நளெதுவோ அண்ணாவே றஜீபனே
பாடித்தான் பறந்தாயோ பார் விட்டே மறைந்தாயோ
நாடி வந்து மீண்டுமோர் துணையெனக்குத் தாராயோ!


**மனம் நெகிழ்ந்து துயரும்**
**குடும்பத்தின் சார்பாக அன்புத் தம்பி**
**ரங்கடம்பநாதன் - விஷ்ணுகாந்தன்**

(cs:41769) (2.6)

# மரண அறிவித்தல்

## விநாயகர் இராசேந்திரம்

தோற்றம்
03.05.1933



மறைவு
20.12.2021

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகர் இராசேந்திரம் அவர்கள் (20.12.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர் - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாபதி- சின்னபிள்ளை (பலாலி) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீராஜ்குமார் மற்றும் ஸ்ரீ ரஞ்சிதகுமார், ஸ்ரீவளர்மதி, ஸ்ரீரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் விசுவபாலசிங்கம்- அன்னலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (23.12.2021) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**மயிலங்கூடல், இளவாலை.**

# மரண அறிவித்தல்

## இலட்சுமி தம்பிப்பிள்ளை



தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை சாவகச்சேரியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இலட்சுமி தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (21.12.2021) செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் காசிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், விநாயகமூர்த்தி, சின்னதம்பி, யோகம்மா, சின்னையா, காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் கணேசு, சறோசினிதேவி (சுவீடன்), இரத்தினம் (ஓய்வுநிலை உப அதிபர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), புவனேஸ்வரி (சுவிஸ்) பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பூரணம் மற்றும் புலேந்திரலிங்கம், சாந்தநாயகி, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் பரமேஸ்வரி, தர்மலிங்கம் (சுவீடன்), ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சுமதினி, சிவகுமார், சாந்தினி, சுகந்தினி, சதீஸ்குமார், ரவீந்திரன், வாசுகி, வானதி, ரமேஸ்வரன், மகேந்திரன், மோகனாம்பிகை, புவேந்திரன், காலஞ்சென்ற நகுலாம்பிகை மற்றும் இராகுலா ராணி, ரவீந்திரன், விமலாராணி, மாலதி, ஞானேந்திரன், விருதுபாசினி, காலஞ்சென்ற சுதா மற்றும் நந்தபாசினி, ஜீவபாசினி, ஐங்கரன், நவநந்தினி, சதானந்தன், சத்தியானந்தன், சர்வானந்தன், குகானந்தன், மோகனகுமார், ஓர்மிளா, சுகாசினி, யாழினி, கேதீஸ்வரன், ராசகுமார், லக்ஷினி, சந்திரன், துஷி, ராகேஸ், தர்சனா, தர்சன், காலஞ்சென்ற சஜீபன் மற்றும் நிரோஷ், தனுஷ்ர், பிரியா, சிராணி ஆகியோரின் பேர்த்தியும், அனுயன், நிருசனா, நிதுஷா, அஜித், ஆகாஷ், ஜெனிக்சன், ஆர்த்திகா, சாருகா, விதுஷிகா, கனிஷ், அகிஷா, அபிஷா, ஆருஷா, கினுஷ், பிரவின், பிரன்யா, அனுதரன், இந்திகா, விவுலன், துவாரகன், விதுன், சதுசா, ரதுன், மயூரி, கஸ்தூரி, சுகந்தன், சுதர்சன், மாதுரி, வக்ஷயன், தனுசன், கார்த்திக்,சிநேவா, அயிலோன், பானுஷா, சந்துரு, ரஜித், திசானா, பிரதியா, ரஜினா, சோனியா,கீர்த்தனா, தாமிரன், ரஜசனா, அனிஷா, சௌமியா, சனா, ரிஷிகா, சிஜோ, நிவாஷ், நிரோஜன், பவித்திரா, நிவேதனன், பர்மிளா, பர்மிளன், பவிசன், யானுசன், யாதவி, யாதவன், பவீனன், தஸ்வின், சமேரா, காரணிகா, ஜாதுரன், டமித்தா, பூமிதா, சனத்தா, அஸ்வின், அனிஸ்,ஜஸ்மிதன்,லக்சுதன், அஜீஸ், அஸ்ஸனி, தீபிகா, மதுமிதா, பிரியந்தி, பிரியசகி, ஷஷ்வின், தாருஸ், ஆரிஸ், அர்வின், செல்வின், அஜய், ஆகியோரின் பூட்டியும், அக்ஷத், அத்விக், அக்சரா, அக்ஷரன், தஸ்வின், தனிஸ், ஏவா, ஏடன், ரியா, தீக்சா, ஆதிரன், வெண்ணிலா, ஆகியோரின் கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.12.2021) புதன்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**
**077 480 3421**

**தகவல்:**
**சி.த. இரத்தினம்**
**(மகன்)**

மலர்வு
10.05.1916

உதிர்வு
21.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஆவணத்தை...

இந்தக் கலந்துரையாடல், கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹொட்டலில் நேற்று நடைபெற்றது.

அழைக்கப்பட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் குறித்த கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். புளொட் சார்பில் ஆர்.ராகவன், இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அமீர் அலி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நிசாம் காரியப்பர் பங்குபற்றினர்.

கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை வகித்தார்.

ஏற்கனவே, இந்தக்கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் 5 பக்க நகல் ஆவணமொன்றை கூட்டத்தில் ரெலோ கையளித்திருந்தது. அந்த நகல் ஆவணத்தை ஏற்பதற்கு தமிழ் அரசுத் தரப்பு மறுத்தது. அதனால், தமிழ் அரசுத் தரப்பால் ஒரு நகல் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், மற்றைய நகலின் சில விடயங்களை இந்த நகலில் சேர்த்துக் கொள்வது என்று இணக்கம் காணப்பட்டது.

இந்தநிலையில், வயதில் மூத்த தலைவர்கள், கூட்டத்திலிருந்து வெளியேற எஞ்சியோர் ஒன்றிணைந்து தொடர் கலந்தாலோசனைகளில் ஈடுபட்டனர். அதனடிப்படையில் மனோ கணேசன், நிஸாம் காரியப்பர், செல்வம் அடைக்கலநாதன், சுரேந்திரன், ஸ்ரீகாந்தா, மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோர் , இரண்டு ஆவணங்களையும் ஒன்றிணைத்து புதிய நகல் வடிவத்தை தயாரிக்கும் பணியில் நேற்று மாலை முழுவதும் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 6 மணியளவில் நகல் வடிவுக்கான பூர்வாங்க இணக்கம் எட்டப்பட்டது. தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ள எட்டு விடயங்களையும், அத்தோடு நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களையும் ஒன்றிணைத்து, புதிய நகல் வடிவத்தை தயாரிக்கும் பொறுப்பு சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆவணம் தயாரிக்கப்பட்டதும் அதனை அவர் எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பி வைப்பார். அதனைக் குறித்த கட்சிகள் ஆராய்ந்து சம்மதம் தெரிவித்த பின்னர், அது பகிரங்கப்படுத்தப்படும்.

அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து அதில் ஒப்பமிட்டதும், அந்த ஆவணத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-22)

## கானமயில்நாதனின்...

னையும், நல்லூர் சிறி துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மதியம் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-5)

## எஸ்.ரி.ஆர்...

முகருமான எஸ்.ரி.ஆர். என்று அன்பாக அழைக்கப்படும் சின்னத்தம்பி தியாகராஜா கொழும்பில் நேற்றுக்காலமானார்.

ராஜா சினிமா- யாழ்ப்பாணம், வசந்தி சினிமா- வவுனியா, அமுதா சினிமா- வவுனியா, சரஸ்வதி சினிமா- திருகோணமலை, சுகந்தி சினிமா- மட்டக்களப்பு, சாந்தி சினிமா-மட்டக்களப்பு என வடக்கு -கிழக்கின் முன்னணி திரையரங்குகளின் உரிமையாளர் இவராவார்.

இவர், தமிழக முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான புரட்சித் தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரனின் (எம்.ஜி. ஆர்.) தீவிர ரசிகர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

## காரைநகர்...

தாஸ் இயற்கை எய்தியமையால் புதிய தவிசாளராக சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த மயிலன் அப்புத்துரை தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து அவர் சமர்ப்பித்த முதலாவது வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது பாதீடு சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதனையடுத்து பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பாதீட்டுக்கு ஆதரவாக ஈ.பி.டி.பியின் 2 உறுப்பினர்களும் சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒருவரும் வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து ஒரு வாக்கால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. இதனையடுத்து தவிசாளர் பதவியிழந்தார். (த -319)

## 105 வயது...

மூத்த பிரஜையான 105 வயதுடைய மூதாட்டி, நேற்றுக் காலமானார். சாவகச்சேரி சங்கத்தானை சப்பச்சிமாவடியைச் சேர்ந்த இலட்சுமி தம்பிப்பிள்ளை என்பவரே இவ்வாறு காலமானார்.

சுகதேகியாக வாழ்ந்துவந்த அவர், ஒரு வாரமாக ஏற்பட்ட சுகவீனம் காரணமாக நேற்றுக் காலமானார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

10 பிள்ளைகள் (5 ஆண் பிள்ளைகள் 5 பெண் பிள்ளைகள்), பேரப்பிள்ளைகள் 45 பேர், மூன்றாம் தலைமுறையான பூட்டப் பிள்ளைகள் 83 பேர், நான்காம் தலைமுறையாக கொப்பாட்டன் பிள்ளைகளாக 12 பேர் என மொத்தம் 150 பேரை இந்த உலகத்துக்கு வழங்கியுள்ளார்.

பத்து பிள்ளைகளில் 5 ஆண்கள் இலங்கையிலும் மூன்று மகள்கள் நோர்வே, சுவிஸ், ஜேர்மனியிலும் ஒரு மகள் இலங்கை சாவகச்சேரியிலும் வசிக்கின்றனர். ஒரு மகள் காலமாகிவிட்டார்.

குறித்த மூதாட்டி,1916ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி பிறந்தவராவார். இவரது கணவர் 1901 ஆம் ஆண்டு பிறந்து, 1990 ஆம் ஆண்டு 90 வயதில் காலமானார்.

குறித்த மூதாட்டி, தனது கணவருடன் சேர்ந்து விவசாயம் செய்துவந்துள்ளார். சரியான நேரத்துக்கு உணவு உண்ணும் பழக்கம் உடையவர். இதுவரை எந்தவிதமான நோய் நொடிகளுமின்றி சுகதேகியாக வாழ்ந்துள்ளார்.

இந்தவருட முற்பகுதியில் அவர், தனது 105 ஆவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடியிருந்தார்.

அதுமட்டுமன்றி, புலம்பெயர் நாடுகளிலுள்ள உறவுகளால் அனுப்பப்பட்ட பணத்தை சாவகச்சேரி மருத்துவமனையின் அபிவிருத்திக்காக மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9,159)

## வெளிநாட்டு...

நாடாகும். எனவே, தேவையற்ற தலையீடுகளை ஒருபோதும் ஏற்கமாட்டோம்." - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, "அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழ் பேசும் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், அவர் மேலும் கூறியவை வருமாறு,

"இலங்கையென்பது ஏதேச்சாதிகார நாடு கிடையாது. அந்தவகையில் தாம் சரியென ஏற்றுக்கொள்ளும் கருத்தை சுதந்திரமாக -வெளிப்படையாக - தெரிவிப்பதற்கான வாய்ப்பு அனைவருக்கும் அவசியம்.

இதன்படி, இந்தநாட்டிலுள்ள மக்களுள் ஒரு தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு போராட்டங்களை நடத்துவதற்கு, அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு, வெளிநாட்டுத் தூதரகங்களுடன் பேச்சு நடத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை. நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல, வெளிநாடுகள் மற்றும் எமது நாட்டில் செயற்படும் சிறுகட்சிகள் என்பன இலங்கையொரு இறையாண்மைமிக்க சுயாதீன நாடு என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, உலகில் எந்தவொரு நாடாலும் தேவையற்ற விதத்திலான தலையீடுகளையும், அழுத்தங்களையும் மேற்கொள்ள முடியாது. வரலாற்றில் அவ்வாறான சிற்சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால், அதற்கான வாய்ப்பை நாம் வழங்க மாட்டோம். அது ஏற்புடைய நடவடிக்கையாகவும் அமையாது.

தெற்காசியாவின் ஆத்மாவாகக் கருதப்படும் எமது அண்டை நாடான இந்தியாவுடன் சிறந்த நல்லுறவு இருக்கின்றது. அந்த நட்பு நேர்த்தியான முறையில் நீடிக்கின்றது.

எவரும் பேச்சு நடத்தலாம். போராட்டங்களில் ஈடுபடலாம். இறையாண்மை, சுயாதீனம் தொடர்பில் நாம் தெளிவாக உள்ளோம்." - என்றார். (த- 44)

## இரு வீடுகளில்...

ஆபரணங்கள் மற்றும் பணப்பரிமாற்ற அட்டைகள், கடவுச்சீட்டு ,அடையாள அட்டைகள், வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த மதுப் போத்தல்கள் உள்ளடங்கலாக ஆறு இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டது.

அந்த வீட்டிலிருந்தவர்கள், அண்மையில்தான் வெளிநாடு ஒன்றிலிருந்து வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தபோதும் கமராக்கள் சில அடித்துநொருக்கப்பட்டுள்ளன.

ஒளிப்பதிவு சேமிக்கும் பதிவகத்தையும் கொள்ளையர்கள் எடுத்துச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மற்றைய கொள்ளை, கைவேலி 2ஆம் வட்டாரப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலையில் வீட்டின் கதவு உடைத்து வீட்டிலிருந்து 20 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றம் 5 ஆயிரம் ரூபா பணம் என்பன் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்கள் நள்ளிரவு 11 மணிக்கும் அதிகாலை 4.30 மணிக்கும் இடையில் பதிவாகியுள்ளன. சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த- 19)

## கட்சியிலிருந்து...

யோருடன் நேரடியாகக் கலந்துரையாடிய போது, சமூகநலன் சார்ந்து எடுக்கப்பட்ட 'வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பது' என்ற முடிவுக்கு மாறாகச் செயற்பட்டதாகத் தெரிவித்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பரமானந்தம் தவமணி, மற்றும் கட்சியின் காரைநகர் அமைப்பாளர் கணபதிப்பிள்ளை நிமலதாசன் ஆகியோர் உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்கில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தமையால் அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுகின்றனர் என்று அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-270)

## பாண், பணிஸ¬க்கு...

பட்டுள்ளது. அதனால், குறித்த பொருள்கள் இனிமேல் விலைக்கட்டுப்பாடின்றி விற்பனை செய்யப்படும் என்று, பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, பேக்கரி உரிமையாளர்கள் விநியோகம் மற்றும் தமது தேவைக்கேற்ப விலைகளை நிர்ணயிக்க முடியும் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் உத்தேச பரிமாற்றல் மையம்

## அவுஸ்திரேலியா ஆர்வம்

கொழும்பு,டிசெ.22

இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும், உத்தேச பரிமாற்றல் மையத்தை இலங்கையில் நிறுவுவதற்கான ஆர்வத்தை அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் கரேன் அன்ட்ரூஸ் வெளிப்படுத்தினார்.

வெளிநாட்டு அமைச்சில், அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸைச் சந்தித்த அவர் இதனை வெளிப்படுத்தினார். இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலும், பிராந்தியத்திலும் ஆள்கடத்தல் மற்றும் நாடு கடந்த குற்றங்களைத் தடுப்பதில் ஆஸ்திரேலியாவின் குறிப்பிடத்தக்க ஈடுபாடு குறித்து வெளிநாட்டு அமைச்சர் தனது திருப்தியை வெளியிட்டார். 2009 இல் உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்த பின்னரும் எஞ்சியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட கொள்கைகள் மற்றும் சட்டங்களின் தொடர்ச்சியான மீளாய்வு தொடர்பில் அமைச்சர் பீரிஸ், அவுஸ்திரேலிய அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

தொழிற்கல்வியில் அவுஸ்திரேலியாவின் அனுபவத்தை குறிப்பிட்ட வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், இலங்கையின் தொழிற்கல்வித் துறையை வலுப்படுத்துவதற்காக அவுஸ்திரேலியாவின் தொழில்நுட்ப உதவியை நாடினார்.

அவுஸ்திரேலியாவின் உற்பத்திகளை இலங்கை ஊடாக ஏனைய சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்காக, உத்தேச பரிமாற்றல் மையத்தை நிறுவ ஆர் வம் தெரிவித்தார்- என்றுள்ளது. (ஒ-4இ)

# மருத்துவ முகாம்

சாவகச்சேரி, டிசெ.22

தென்மராட்சி பிரதேச மதகுருமார் மற்றும் கோயில்களின் நிர்வாகத்தினருக்கு இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாகாண கலாசாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த முகாம் நடைபெறுமென பிரதேச கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1,9)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், சுன்னாகம்,**
**கந்தரோடைப்பகுதியில் கணக்கர் வளவு**
**2 பரப்புக்** காணி விற்பனைக்குண்டு.
**14 அடிபாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்**
**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: **077 814 7389, 070 705 1655**
(cr 36772) (2.6)

# வேலையாள்கள் தேவை

**சூப்பர் மார்கெட்** வேலைக்கு ஆள்கள் தேவை. **காசாளர், கணக்காளர், மேற்பார்வையாளர், முகாமையாளர்** Photo Shop IT தெரிந்தவர்கள். **பெண்கள்** மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
இடம்: நல்லூர், திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு:
தொ.பே.: **077 028 2811, 076 022 5001**
முகவரி: **195, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
Email Ad.: mkpdiscounts@gmail.com
(cs.41770) (2.6)

# காணி தேவை

உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், பகுதிகளில் பலாலி வீதியை அண்மித்த பகுதியில் (5 - 10 பரப்பு) காணி தேவை.
உரிமையாளர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: **076 399 6505**
(CS 41608)(3.6)

# மெஷின் இயக்குனர் தேவை

**மெஷின் இயக்குனர்** மற்றும் **உற்பத்தி உதவியாளர்** உடனடியாகத் தேவை.
வயதெல்லை - 25 - 50
ஆர்வமுள்ளோர் தொடர்புகொள்ளவும்
**074 170 3360, 021 203 0400**
**திண்ணை வேறாட்டல்**
**86, பலாலி வீதி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.**

# வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்புக்கள்

**ஓமான்**
ஓமானில் பிரபல்யமான கம்பனியில் கிளீனர் வேலைவாய்ப்புக்கள் ( AIR PORT, HOSPITAL, HOTEL ) சம்பளம் 75000.00 + overt ime
நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கையர்களுக்கு ஓமான் வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.

**கட்டார்**
கட்டாரில் பூந்தோட்டம் பராமரிப்பாளர்கள் தேவை. சம்பளம் 83000.00+ overtime நேர்முகத் தேர்வுகள் இல்லை.
உணவு தங்குமிடம் விடுதிகள் மருத்துவம் இலவசம்
விசா கைவசம் உள்ளது.
உடனடிப் பயணம் அழையுங்கள் **077 722 8231**

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1934



மறைவு 20 . 12 . 2021

## வைரவி நடராஜா

**( C.T.B நடராஜா)**

கலாநிதி வீதி, ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைரவி நடராஜா (20.12,2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- ஞானம்மா தம்பதியரின் மருமகனும் இராசமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராஜமுருகதாஸ் மற்றும் கிருஷ்ணராஜி (லண்டன்), கஜதாஸ்(லண்டன்) கிருஷ்ண றோஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன் (லண்டன்), றஜிதா (லண்டன்), அஜந்தன் (R.D.A), ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்தன் , தாஸ், சயன், ரிசான், டணிகா,வினுசன், வர்ணிகா, டர்ஷிகன், கர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, இராசரத்தினம், சிவராசா, இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2021) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை வடக்கு உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கலாநிதி வீதி, ஏழாலை வடக்கு.** **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 02 . 1944



இறப்பு 18 . 12 . 2021

## திருமதி மனோன்மணி விஜயரத்தினம்

இராசவீதி கோப்பாய் தெற்கு, கோப்பாயை தற்காலிக முகவரியாகவும், கேசரி வீதி, தையிட்டி காங்கேசன்துறையை நிரந்தர முகவரியாகவும் கொண்ட திருமதி மனோன்மணி விஜயரத்தினம் கடந்த (18.12.2021) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதிகளின் ஏக புதல்வியும், சின்னப்பு - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு விஜயரத்தினம் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், விஜயா (லண்டன்), விஜிதா (நல்லூர் பிரதேசசபை), வனிதா (லண்டன்), மணிமாறன் (பிரான்ஸ்), ஜெயமாறன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவதாசன் (லண்டன்), விஜயரூபன் (மதுவரி திணைக்களம்), சுதாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜீபா, லக்சயா, லக்சோமன், கர்சிகா, இஷாந், கவிசயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசதுரை, பொன்னுத்துரை, சின்னத்துரை, ஐயாத்துரை மற்றும் அப்புத்துரை பரமதுரை, அண்ணாத்துரை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மகேஸ்வரி, குணரத்தினம் மற்றும் நவரத்தினம், அழகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் கடந்த (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
**கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.**
தற்காலிக முகவரி:
**இராச வீதி, கோப்பாய் தெற்கு.**
(cs 41743) (2.6)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org